Registered as a News Paper பக்கங்கள் 06 விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 08 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 12 (27-11-1992) வெள்ளிக்கிழமை ஓசை 283

## இன்று அணிவகுப்பும் மாபெரும் பொதுக்கூட்டமும்

மாவீரர் நாளை முன்னிட்டு இன்று அணிவகுப்பும் மாபெரும் பொதுக்கூட்டமும் நடைபெறவுள்ளது. அணிவகுப்பு பிற்பகல் 2-00 மணிக்குக் கந்தர்மடத்தில் ஆரம்பித்து யாழ் பல்கலைக்கழகத்தை அடையும். பொதுக் கூட்டம் பிற்பகல் 5-00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமாகவுள்ளது. இப்பொதுக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் கலந்துகொண்டு உரையாற்றுவர். இதையடுத்து கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

# உறுதி தளராது துணிந்து போராடுவோம்

# தலைவர் பிரபாகரன் மக்களுக்கு அழைப்பு

## மாவீரர் தியாகம் வீண்போகவிடோம்

(யாழ்ப்பாணம்)

எம்மை அழித்து விடுவதற்கும் எமது மண்ணை விழுங்கிவிடுவதற்கும் எதிரி கங்கணம் கட்டி நிற்கிறான். இன அழிப்பு யுத்தத்திற்காக எந்த அளவிற்கும் இரத்தம் சிந்த தயாராக இருக்கின்றான்.

எனவே, போராடித்தான் எமது சுதந்திரத்தை நிலை நாட்டிக்கொள்ளவேண்டும். சுதந்திரம் என்பது பேரம்பேசிப் பெற்றுக்கொள்ளும் ஒரு வியாபாரப் பண்டம் அல்ல. அது இரத்தம் சிந்தி வென்று கொள்ளப்படும் ஒரு புனிதமான உரிமை.

நாம் தொடர்ந்து போராடுவோம். எத்தனை இடர் வரினும், எத்தனை துயர் வரினும் நாம் எமது விடுதலை நோக்கிய பயணத்தை தொடருவோம். எமது மக்கள் சிந்திய இரத்தமும், எமது மாவீரர் புரிந்த தியாகமும் வீண்போகாதிருக்க நாம் உறுதி தளராது போராடுவோம்.

இவ்வாறு தலைவர் பிரபாகரன் மாவீரர் தினம் சம்பந்தமாக விடுத்த செய்தியில் தெரிவித்தார்.

அவர் விடுத்த செய்தியின் முழு விபரம்வருமாறு:

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே!

இன்று மாவீரர் தினம்.

எமது விடுதலைப் போராட்டத்தை ஒப்பற்ற வீரகாவியமாக உலக வரலாற்றில் பொறித்துச் சென்ற உன்னதமானவர்களை நாம் நினைவில் நிறுத்திப் பூசிக்கும் புனித நாள்.

மாவீரர்கள் மகத்தான இலட்சியவாதிகள். தாம் தழுவிக்கொண்ட இலட்சியத்தைத் தமது உயிரிலும் மேலாக நேசித்தவர்கள். மக்களின் விடுதலையை தமது மானசீக இலட்சியமாக, வாழ்வின் உரிய குறிக்கோளாக வரித்துக் கொண்டவர்கள். அந்த இலட்சியத்திற்காகவே மடிந்தவர்கள்.

மனித வாழ்வில் சுதந்திரம் உன்னதமானது மனித நற்பண்புகளில் தலைசிறந்தது. மனித வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் ஆதாரமானது. சுதந்திரம்தான் மனித வாழ்விற்கு அர்த்தத்தைக் கொடுக்கிறது. முழுமையைக் கொடுக்கிறது.

மனித ஆன்மாவின் ஆழமான அபிலாசையாகவே மனிதனிடம் சுதந்திரதாகம் பிறக்கிறது.

நிறைந்ததாக இன்று எமது தேசிய விடுதலைப் போராட்டம் மிகவும் சிக்கலான வரலாற்றுச் சூழ்நிலையை எதிர்கொண்டு நிற்கிறது.

சமாதானத்தின் கதவுகளை இறுகமூடிவிட்டு போரை விரிவாக்கம் செய்வதில் எதிரி தீவிர



அக்கறைகாட்டி வருகிறான். தமிழரின் தேசிய பிரச்சினைக்கு எந்த உருப்படியான தீர்வுத் திட்டத்தையும் முன்வைக்க அரசு தயாராக இல்லை.

## உலகில் அநீதி இருக்கும்வரை

## சமாதானத்தின் கதவுகளை எதிரி இறுக மூடிவிட்டான்

## வை - 12 நோட்டம்

தென்மராட்சிப் பகுதியை நேற்றையதினம் சிறிலங்காப் படைக்குச் சொந்தமான வை - 12 சீன விமானம் ஒன்று நேற்று காலை 10 30 மணியளவில் இருதடவை சுற்றி நோட்டம் இட்டது. இதனால் சாவகச்சேரி சந்தைக்கு வந்தவர்கள் பீதியடைந்தனர்.

## இன்று தேசிய விடுமுறை

தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு இன்று தமிழீழ தேசிய விடுமுறையாக பிரகடனப்படுத்தபபட்டிருக்கிறது.

அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் ஏனைய அலுவலகங்கள் ஆகியவை இன்று மூடப்பட்டிருக்கும்.

எனினும் மருத்துவ மனைகள், சிற்றுண்டிச்சாலைகள், துவிச்சக்கரவண்டி திருத்துமிடங்கள் ஆகியவை வழமைபோல் செயற்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## "விடுதலைப் புலிகள்" வெளி வந்துள்ளது

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' - குரல் 34 - கார்த்திகை மாத இதழ் வெளிவந்துள்ளது.

## விடுதலை போராட்டமும் இருக்கும்

நாகரிகம் தோன்றிய காலந்தொட்டு, யுகம் யுகமாக மனித குலம் சுதந்திரம் வேண்டிப் போராடி வருகிறது. அடிமைத் தளைகளிலிருந்து, அடக்குமுறையிலிருந்து விடுதலைபெற வழந்து வருகிறது. காலம் காலமாக இந்தப் பூமியில் நிகழ்ந்த போராட்டங்கள், புரட்சிகள், யுத்தங்கள் எல்லாம் மனித விடுதலை எழுச்சியின் வெளிப்பாடுகளன்றி வேறொன்றுமல்ல.

மனிதனை மனிதன் அடிமைகொள்கிறான். அழிக்க முயல்கிறான். மனிதனை மனிதன் சுரண்டி வாழ்கிறான். அன்றுதொட்டு இன்று வரை மனிதனே மனிதனின் முதன்மையான எதிரியாக விளங்கி வருகிறான். ஒருவனது சுதந்திரத்தை இன்னொருவன் விழுங்கிவிட எத்தனிக்கும்போது தர்மம் செத்துவிடுகிறது. உலகில் அதர்மமும் அநீதியும் பிறக்கிறது. சாதி என்றும், வர்க்கம் என்றும், இனம் என்றும் பிளவுகள் எழுந்து மனிதரிடையே முரண்பாடு தோன்றுகிறது, மோதல்கள் வெடிக்கிறது இந்த உலகில் அநீதியும் அடிமைத்தனமும் இருக்கும்வரை, சுதந்திரத்தை இழந்து வாழும் மக்கள் இருக்கும்வரை, விடுதலைப் போராட்டங்களும் இருக்கத்தான் செய்யும். இது தவிர்க்கமுடியாத வரலாற்று நியதி ஏனெனில் சுதந்திர எழுச்சியின் உந்துதலால்தான் மனித வரலாற்றுச் சக்கரமும் சுழல்கிறது.

## உலகில் எங்கும் நிகழாத அற்புதமான தியாகங்கள்

ஒடுக்கப்படும் உலக மக்களில் ஒரு பிரிவினராக நாமும் சுதந்திரம் வேண்டிப் போராடி வருகிறோம். எல்லா விடுதலைப் போராட்டங்களையும்விட எமது போர்க்குரல் இன்று உலகரங்கில் மிகப் பெரிதாக ஒலிக்கிறது. எமது சுதந்திரப் போர் ஏனைய விடுதலைப் போராட்டங்களைவிட சாராம்சத்தில் வித்தியாசமானது; தனக்கே உரித்தான தனித்துவத்தைக் கொண்டது; ஒப்பற்ற சிறப்பம்சங்களைக் கொண்டது.

உலக வரலாற்றில் எங்கும், எப்பொழுதும் நிகழாத அற்புதமான தியாகங்களும், அதிசயமான அர்ப்பணிப்புகளும் இங்கு, எமது தாயக மண்ணில் நிகழ்ந்திருக்கிறது. சாவுக்கு அஞ்சாத வீரத்திற்கும், ஈகத்திற்கும், இலட்சியப் பற்றிற்கும் எமது மாவீரருக்கு நிகர் எவருமேயில்லை என நான் பெருமிதத்துடன் கூறுவேன். இப்படியானதொரு மகிமையும், மேன்மையும் வாய்ந்த ஒரு மகத்தான வீரகாவியத்தை எமது மாவீரர்கள் படைத்துச் சென்றிருக்கிறார்கள். எமது மாவீரர்களின் இந்த ஒப்பற்ற சாதனைகளால் ஒடுக்கப்படும் உலகிற்கு எமது போராட்டம் ஒரு உந்துசக்தியாக, ஒரு முன்னுதாரணமாக, ஒரு வழிகாட்டியாகத் திகழ்கிறது.

## போராளிகளின் நெஞ்சுரத்தில் எமது வலிமை பிறக்கிறது

எமது போராட்டத்தின் வலிமை எமது போராளிகளின் நெஞ்சுரத்திலிருந்தே பிறக்கிறது. சாவுக்கு அஞ்சாத அவர்களது துணிவும் உறுதிப்பாடுமே எமது போராட்டத்தின் பலமும் வளமுமாகும். எமது எதிரிக்கு உலகம் ஆயுதத்தையும் பணத்தையும் வாரி வழங்குகிறது. நாம் உலகத்திடம் கைநீட்டி நிற்கவில்லை. எவரிடமும் தங்கி நிற்கவில்லை. நாம் எமது சொந்த மண்ணில், எமது சொந்த மக்களில், எமது சொந்தக் கால்களில் தங்கி நிற்கிறோம். எமது சொந்தக் கைகளால் போராடுகிறோம். இதுவே எமது தனித்துவத்தின் தனிச் சிறப்பாகும். எமது சொந்தப் பலத்தில், நாம் வேரூன்றி நிலையாக நிற்பதால் மற்றவர்களின் அழுத்தங்களுக்குப் பணிந்து கொடாமல் எம்மால் தலைநிமிர்ந்து நிற்க முடிகிறது.

புதிய சவால்களும், புதிய நெருக்கடிகளும்

---

இவ்வாண்டு என்றுமில்லாத வகையில் யுத்தம் முனைப்புற்று உக்கிரமடைந்தது எதிரியின் படையெடுப்புத் திட்டங்களை முறியடிக்கும் வகையில் நாம் புதிய போர்த்தந்திரோபாயங்களைவகுத்து தாக்குதல்களைத் தீவிரப்படுத்தினோம் இதனால் என்றுமில்லாதவாறு எதிரி களத்தில் இரத்தம் சிந்தினான். வரலாற்றில் நிகழாத பாரிய இழப்புக்களைச் சந்தித்தான். ஆக்கிரமிப்பாளர்களின் சுவடுகளை இந்த மண் ஒருபொழுதும் சுமந்துகொள்ளாது என்பதை எதிரிக்கு நாம் நன்கு உணர்த்திக்காட்டினோம்.

போர்முனையில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டபோதும், போரின் விளைவால் பொருளாதாரம் சீர்குலைந்தபோதும், போரில் புலிகளை வெற்றி கொள்ள முடியாது என உணர்ந்துகொண்டபோதும் போர் அணுகுமுறையைக் கைவிட சிங்கள அரசு தயாராக இல்லை. ஆயுதப் படைகளைப் பலப்படுத்தி, ஆக்கிரமிப்பு யுத்தத்தை தீவிரப்படுத்தி, இராணுவத் தீர்வை முன்னெடுப்பதிலேயே அரசாங்கம் கண்ணும் கருத்துமாக இருக்கிறது.

இதிலிருந்து நாம் ஒன்றைத் தெட்டத் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும். அதாவது. ஆயுத பலத்தால் தமிழினத்தை அடக்கி ஆளவேண்டுமென்ற சிங்கள-பௌத்த பேரினவாதத்தின் ஆதிக்க மனோநிலையில் சிறிதளவேனும் மாற்றம் எதுவும் நிகழ்ந்துவிடவில்லை. இனத்துவேச அரசியல் சேற்றில் சிங்கள தேசம் மூழ்கிக்கிடக்கும்வரை தமிழரின் தேசிய அபிலாசைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் ஒரு நீதியான, நியாயமான அரசியல் தீர்வை நாம் சிங்கள ஆளும்வர்க்கத்திடமிருந்து எதிர்பார்க்க முடியாது. இந்தக் கசப்பான உண்மையை எமது மக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

( 6 ஆம் பக்கம் பார்க்க )

---

வெளிவந்துள்ளது.

தலைவர் பிரபாகரனின் மாவீரர்நாள் செய்தியைத் தலைப்பு செய்தியாகத் தாங்கிவரும் இவ் இதழ் மாவீரர்நாள் இதழாக வெளிவந்துள்ளது.

### யாழ் விஜயம்

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உயர் அதிகாரி ஒருவர் இன்று கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வருகிறார்

இவர் விமானம் மூலம் பலாலிக்கு வந்து காங்கேசன்துறையில் குமண கப்பல்மூலம் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்து யாழ். சர்வதேச செஞ்சிலுவை சங்க அலுவலகத்தை வந்து சேருவார்.

---

# நள்ளிரவு நினைவொலியுடன் மாவீரர்நாள் எழுச்சியுடன் ஆரம்பம்

(நள்ளிரவு நிருபர்)

தமிழின தேசிய விடுதலைப் போராட்டத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களின் நினைவாக நினைவொலிகள் ஒலிக்க, சுடர் ஒளிகள் ஒளிவீச இவ்வாண்டுக்கான தமிழீழ மாவீரர் நாள் நேற்று நள்ளிரவு ஆரம்பமாகியது.

அனைத்துப் பகுதிகளிலும் உள்ள தேவாலயங்கள், ஆலயங்கள் யாவற்றிலும் நேற்று நள்ளிரவு பன்னிரண்டு மணி கடந்ததும் சரியாக பன்னிரண்டு மணி ஒரு வினாடிமுதல் மாவீரர் நினைவொலிகள் எழுப்பப்பட்டன இங்கெல்லாம் ஏற்கனவே காத்துநின்ற மக்கள் மேற்படி குறித்த நேரம் வந்ததும் அங்குள்ள பாரிய மணிகளை அசைத்து நினைவொலிகள் எழுப்பினர். சுமார் இரண்டு நிமிடங்கள் தொடர்ச்சியாக இந்த நினைவொலி எழுப்பப்பட்டது. மக்கள் அனைவரும் கண்கள் துஞ்சாது விழித்திருந்தனர். நினைவொலிகள் அவர்களது செவியைச் சென்றடைந்ததும் எழுந்து நின்று மாவீரர்களுக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சுப்பர்சொனிக்விமானங்கள்

# நுணாவிலில் குண்டு வீச்சு; பங்கருக்குள் மூடுண்ட மூவர் பலி

(தென்மராட்சி)

சாவகச்சேரி பகுதியில் சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்த இரண்டு ''சுப்பர் சொனிக்'' விமானங்கள் நேற்று நடாத்திய குண்டு வீச்சு தாக்குதலில் மூவர் பலியாகினர். இரண்டு பேர் படுகாயம் அடைந்தனர், பல வீடுகள் பலத்த சேதம் அடைந்தன.

நண்பகல் 12-50 மணியளவில் விரைந்து வந்த இரண்டு சுப்பர் சொனிக் விமானங்கள் அடுத்தடுத்து வீசிய குண்டுகள் நுணாவில் கிழக்கு, கண்டி வீதியில் அமைந்துள்ள வைரவர் ஆலயத்திற்கு முன்பாகவுள்ள வீட்டின் மேல் வீழ்ந்தன, இக்குண்டு வீச்சினால் வீட்டின் பின்புறம் அமைந்துள்ள பதுங்கு குழி மண்ணால் மூடப்பட்டது இதனால் அப்பதுங்கு குழியுள் புகலிடம் தேடியிருந்தோர் புதையுண்டு போயினர். பதுங்கு குழி இருந்த இடத்தில் இரு

(6,ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு.) தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி

(சி/5399)

## தென்மராட்சி வாடிக்கையாளர்கட்கு

தென்மராட்சி மக்களுக்கு டில்காவின் சேவை! உங்கள் கடிகாரங்கள், றேடியோக்கள் யாவும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப் படும். சகல பற்றறிகளும் எம்மிடம் உண்டு. டில்கா வாச்வேக்ஸ் பஸ் நிலையம், சாவகச்சேரி.

(சி-5400)

## மாணவர்களுக்கு

பாடசாலைப் பிள்ளைகளுக்கான அப்பியாசக் கொப்பிகள், புத்தகங்கள் மலிவில் விற்பனையாகிறது. றோனியோ குறைந்த விலையில் செய்து கொடுக்கப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை வெலிங்டன் சந்திக்கருகாமை, யாழ்ப்பாணம்.

(சி-5409)

## காணி விற்பனை

பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அண்மையில் 4 நாலு பரப்பு காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு தொடர்பு: வீ. த பாலசிங்கம் பலாலி வீதி, கோண்டாவில்

(சி/3697)

## ஒலிவெற்றி தட்டச்சு இயந்திரம் (ஆங்கிலம்)

புத்தம்புதிய ஒலிவெற்றி தட்டச்சு இயந்திரம் (Oliviti Typriter (English) விற்பனைக்குண்டு. கொழும்பு விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம். டில்கா வாச் வேக்ஸ், (Dilka Watch Works) பஸ் நிலையம், சாவகச்சேரி.

(சி/5470)

## விற்பனைக்கு

அழகிய படத்துடனான கலண்டர்கள் விற்பனையாகின்றன. பல வர்ணக் கலர்களில் விலாசம் பதிப்பித்தும் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகள் தங்களின் தேவைக்கேற்றபடி கொள்வனவு செய்து ஏமாற்றத்தை தவிர்த்துக் கொள்ளுங்கள் ஸ்ரீ காந்தா அச்சகம்--புத்தகசாலை 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்

(3640)

## மாதிரி வினாத்தாள்கள்

O/L வகுப்புகளிற்கான கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சமயம் (சைவம், றோ. க./கிறீஸ்தவம்), வர்த்தகம், விவசாயம், மனைப் பொருளியல், சித்திரம், சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் (விடைகளுடன்) மலிவு விலையில் விற்பனையாகின்றன. Bond Institute, 582 Stanley Road, Jaffna.

(சி-5450)

## கண்டெடுக்கப் பட்டது

பெறுமதி வாய்ந்த கை மணிக்கூடு வீதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. விபரங்களைக் கூறிப்பெற்றுக்கொள்ளுங்கள். அறிவகம் புத்தகசாலை 374, மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம்.

(சி-5472)

## சோதிடம்

அதிர்ஷ்டகரமான பெயரமைக்க ஜாதகம் எழுத விவாகப் பொருத்தம் பார்க்க, உங்கள் எதிர்காலப் பலாபலனறிய வேலணை சோதிடர் V. A. சிவராசா 152 B அரசடி றோட், கந்தர்மடம் யாழ்ப்பாணம்.

(3716)


## "ஏலோர் எம்பாவாய்'

துணிகளின் பளிச்சிடும் தூய வெண்மைக்கு மில்க்வைற் சலவைத் தூள். அண்ணா கோப்பிக் கடைகளிலும் கிடைக்கிறது. 10 மில்க்வைற்சலவைத் தூள் வெற்றுப் பக்கற் சேர்ப்பித்து ''திருப்பள்ளியெழுச்சி, திருஎம்பாவை'' சேர்ந்த நூலின் பிரதியொன்று அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

(சி-5462)

# மாவீரர் நாள் நவ. 27

மாவீரர் நாள் தனிலே
போர் வீரர் ஆகிடவே
வீட்டிற்கோர் புலியை
நாட்டிற்காய் வழங்கிடுவீர்



## சுவையருவி

இல. 05, மின்நிலைய வீதி
யாழ்ப்பாணம்.

(சி/5489)

# மாவீரர் நினைவாக......

தன்னலம் தனை துறந்தார்கள்
தாயகமே தம் தாகமென்றார்கள்
தமிழுக்கே உயிரெனமொழிந்தார்கள்
தமிழீழம்மீட்க தியாகம் செய்தார்கள்

ஓ மாவீரர்களே!

உங்கள் இலட்சியம்
நிச்சயம் நிறைவேறும்

இளந்தென்றல்

# நினைவு கூருகின்றோம்...

## 1992-11-27

1982 ஆம் ஆண்டு இதே தினத்தில், யாழ்- திருநெல்வேலியில் சிறிலங்கா இராணுவத்தினரின் முற்றுகையின் போது விழுப்புண் அடைந்து, தமிழகத்தில் சிகிச்சையின் போது வீரச்சாவெய்திய-

(தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதன்முதல் விதையான வீரவேங்கை)

லெப். சங்கர் - சுரேஸ் (செல்வச்சந்திரன் சத்தியநாதன் - கம்பர்மலை, வல்வெட்டித்துறை-யாழ்)

1987 ஆம் ஆண்டு கிளிநொச்சியில், இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

துமிலன் (ராஜகோபால் ரவிச்சந்திரன்-முள்ளிப்பொத்தானை)

தண்ணீரூற்றுப் பகுதியில், இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

லெப். அலன் (முருகேசு உருத்திர மூர்த்தி-செம்மலை - மணலாறு)

இதே ஆண்டு இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1988 ஆம் ஆண்டு, கிளிநொச்சி- வட்டக்கச்சிப் பகுதியில், இந்தியப் படையினரின் கண்ணிவெடியில் சிக்கியதில் பலியான 5 - தமிழர்கள்,

யாழ் - பேராலயத்துள் புகுந்த இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு - முகாமில் சுட்டுக் கொலைப்பட்ட தமிழ் இளைஞன்.

1989 ஆம் ஆண்டு பொலிகண்டிப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

லெப். றிச்சார்ட் (இராமசாமி குணராசா - இறக்கண்டி - திருக்கோணமலை)

கிளாலிப் பகுதியில், இந்தியப் படையினர் சுற்றிவளைத்துச் சுட்டபோது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

2-ம் லெப் தினேஸ் (தில்லைநாயகம் அன்ரன் தினேஸ் - புலோப்பளை, பளை - யாழ்)

நாட்டுப் பற்றாளரான

பவுண்

புலோப்பளையில், தேசவிரோதிகளினாற் சுட்டுக் கொல்லப்பட்ட -நாட்டுப்பற்றாளரான

சுதா (கனகசபை சுதாகரன்- சூட்டி வீதி, மாசார்பளை, பளை - யாழ்)

1990 ஆம் ஆண்டு ஒட்டிசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில், சிறிலங்காப் படையினரின் விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்ட 2- சிறுமிகள், சிறுவன் உட்பட 9 - தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு ஆனையிறவுப் பகுதியில், சிறிலங்காப் படையினருடனானசமரில்விழுப்புண்அடைந்திருந்து மருத்துவமனையில் வீரச்சாவெய்திய -

லெப். கணேஸ் (சாம்பசிவம் தயானந்தன்- 2-ம் குறிச்சி, மண்டூர் - மட்டக்களப்பு)

வவுனியா - மாமடு இராணுவக்காவலரண் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய -

ஈஸ்வரன் - கில்மன் (வேலுப்பிள்ளை புஸ்பநாதன்- மகிழடித்தீவு - மட்டக்களப்பு)

நடமாடும் பிரதேச அலுவலகத்தில் தவறுதலான வெடிவிபத்தில் எமைப்பிரிந்த -


சிவா

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

## தமிழீழ விடுதலைப் புலிகள்

[சி/5484]

# 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



மாவீரர் நினைவாக

தாயின்மடியில்
30 - 01 - 1966

தாயகமண்ணில்
27 - 11 - 1987



## லெப். அலன்

[முருகேசு உருத்திரமூர்த்தி]

(செம்மலை, மணலாறு)

சின்னவயதினில் சிந்தனை பெற்றவர்
சுதந்திர காற்றதை சுவாசிக்க பறந்தவர்
சென்ற பாதையில் இடர்கள் கண்டவன்
இடர்கள் கண்டும் இதயம கலங்கியவன்
சுமைகள் தாங்கியவன் கரையே சென்றவன்

உன் பாதையை தொடரும்
மணலாறு. மக்கள்

(3708)

---

யாழ்ப்பாணம் மாவட்ட சட்ட அறிஞர்

## சங்க அங்குரார்ப்பணம்

இடம்: யாழ். இந்து மகளிர் கல்லூரி
யாழ்ப்பாணம்

காலம்: 29-11-1992, ஞாயிற்றுக்கிழமை

நேரம்: மு. ப. 10. 00

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சட்ட அறிஞர்களை நிறுவன ரீதியாக ஒருங்கிணைத்து, சட்டம், சட்டத்தொழில் ஆகியவற்றின் வளர்ச்சிக்காக உழைப்பதற்கு ஒரு சங்கம் அமைக்கவேண்டும் என சில சடடத்தரணிகளினால் எடுக்கப்பட்ட ஒரு தீர்மானத்திற்கிணங்க சட்டஅறிஞர் சங்கத்தின் அங்குரார்ப்பணக்கூடடம் நடைபெறும்.

க. சபாரத்தினம்
செயலாளர்,
நடவடிக்கைக் குழு.

(3699)

---

# இளந்தென்றல்

இல. 14, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-5485)

## மாவீரர் நினைவாக...

தலைவனின் ஆணையேற்று
தமிழீழம் மீட்கச் சென்று
தம் உயிரை ஈந்த
மாவீரர்களே!
உங்கள் தியாகத்தினையும்
இலட்சியப் பற்றினையும்
உணர்ந்து உங்கள் வழி
தொடர்கின்றோம்...

# மின்வளம்

இல. 81, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி- 5486)

---

மாவீரர் நினைவாக......

**மாவீரர்களே!**

எத்தனை துயரதை இம்மண் சுமக்கும் - தமிழ்
ஈழம் நெருப்பெனப் பொங்கிச் சிவக்கும்
வித்தான மாவீரர் தாகம் தணியும் - வெறிச்
சிங்களம் நாளையெம் காலில் பணியும்

நல்லூர் பிரதேசசபை
சனசமூக நிலையங்களின் சமாசம்

[3714]

---

## அறிவித்தல்

காரைநகர் பலநோக்கு கூட்டுறவு சங்கம்
வழக்கம்பரை

பங்குப் பணம் ரூபா 100/

06 - 03 - 1992ல் திருத்தி அமைக்கப்பட்ட கூட்டுறவுச் சட்டத்தின் படி உபவிதி 18 (1) அமைவாக ஒரு பங்கின் பெறுமதி ரூபா100/- ஆகும். எனவே சகல அங்கத்தவர்களும் தமது பங்கினை ரூபா 100/- வைத்திருக்க தவறும் பட்சத்தில் கிளை குழு தேர்தலிலோ, பொதுச்சபையிலோ நெறியாளர் குழுவிலோ பிரதிநிதித்துவமவகிக்க முடியாது. எனவே 31-12-1992 முன்னர் தங்கள் பணத்தொகையை 100/- வைத்திருக்க வேண்டும். எனவே தங்கள் கிளைகள் மூலம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

25.11 92

க. நடராசா
செயலாளர்

(சி-5487)

---

## வீர வணக்கம்

### 2-ஆம் லெப். தினேஸ்

(அன்ரன் தினேஸ்)

| தோற்றம் | வீரச்சாவு |
|---|---|
| 13. 06. 1969 | 27.11.1989 |

★ ★ ★

### லெப். கணேஸ்

(டொமினிக் சாந்தன்)

| தோற்றம் | வீரச்சாவு |
|---|---|
| 05. 08. 1964 | 21. 11. 1986 |

-நினைவு கூரும்
குடும்பத்தினர், நண்பர்கள்

(3675)




30-05-1992 காலை வழமைபோல் அகலவான் மீதிலிருந்து கதிரவன் பூமியில் ஆட்சிய ஆரம்பிக்கிறான். வீசும் தென்றல் காற்றும் வெடிகளாலும், குண்டுகளாலும் அனலாக வீசியது அதுவும் வழமைபோலவே பட்சிகள் கூடுகளையும், குஞ்சுகளையும் விட்டுத் திணறிஓடின. எமது மண்ணில் வாழ்ந்தமையால் சுதந்திரமும் நிம்மதியும் அவைகளுக்கும் இல்லை. ஆனால் வழமைக்கு மாறாக இன்னொன்று நண்பன் நித்தியுடன் நான் சந்தித்துப் பேசிய இறுதி வார்த்தைகளை நினைவுட்புகுத்துகிறது.

இறுதியாக 29 - 05 - 1992 அன்று மாலை ஆவரங்காலில் நடைபெற்ற வீரவணக்கக் கூட்டத்தில் இருவரும் சந்தித்தோம் பல விடயங்களைப் பற்றிக் கலந்துரையாடினோம். உனது புதிய பெயர் புகழேந்தி எனக் கூறினாய். நீ நாளை அடிபாட்டுக்குப் போவதாகக் கூறிவிட்டு ''இந்த அடிபாட்டில் நான் மண்டையைப் போட்டா என்னைப் பற்றி நீ எழுது'' என்று வாய்ப்பேச்சாய் சொன்னாய் அது நிஜமாகிவிட்டதடா!

தெல்லிப்பழையில் எதிரியின் கால் பதிந்துள்ளதா நிலைமை எவ்வாறு இருக்கின்றது என அறிவதற்காகத் தொலைத்தொடர்பு அறைக்குச் செல்கிறேன். அங்கு வானலையில் மிதந்துவந்த சோகக் காற்று நித்தியின் நிரந்தரப் பிரிவைத் தெரிவித்துவிட்டுத் தன்வழியே பயணம் தொடர்ந்தது.

''சோகக் காற்றே ஒருகணம்-நில்
நித்தி சென்ற பாதையைச்-சொல்
அவன் வீரவரலாற்றை ஒரு-முறை பகிர்ந்துவிடு''

நித்தி கட்டையான உருண்டையான, இறுக்கமான உடலமைப்பைக் கொண்ட இளம் புலி. இவன் முகத்தை வர்ணிப்பதைவிட இதயநாதத்தில் இசைந்து இருக்கும் பாட்டுவரி பொருத்தமாக இருக்குமென நினைக்கிறேன்.

''பால்மணம் மாறாத பிஞ்-சுகள்
பிரபாகரன் வளர்க்கின்ற-குஞ்சுகள்''

இளமை பொழியும் உடலமைப்பும் எதையும் இலகுவில் புரிந்துகொள்ளும் மதி நுட்பமும் கொண்டவன்.

கல்வி கற்கும் காலத்தில், விளையாட்டுத் துறையில் இவன் முத்திரை ஆழமாகப் பதித்ததமையால் பாடசாலையில் சகலருக்கும் இவன் அறிமுகமாகி இருந்தான்.

குடும்ப நிலைமையால் இவனது கல்வி தொடர வாய்ப்பின்றிப் போனது. சிறுவயதிலேயே தந்தையை இழந்த இவன் கல்வியை நிறுத்தி வியாபாரத்தில் இறங்கினான்.

இவ்வேளையில் 1990 இல் மீண்டும் ஈழயுத்தம் ஆரம்பமானது. எங்கும் குண்டுமழை, ஷெல், எத்திசையிலும் அவல ஓலம். இடம்பெயர்வு விடுதலை வேண்டி இளம் வேங்கைகள் நித்தமும் களப்பலியாகினர். தாயக விடுதலையே தமிழரின் விடிவுஎன உணர்ந்து கொண்ட ''சம்புநாதன்'' நித்தியாகத் தன்னை மாற்றி போரிலே புதுயுகம் படைக்கும் புலிகளின் கடின உழைப்பில் பங்குகொண்டான்.

கோட்டையில் பதுங்கு குழி அமைத்தல், பண்ணை பாலத்துப் பக்கம் ரயர்ப்பொயின்ற் அமைத்தல், இரவோடுஇரவாக அமைக்கும் காவலரண்கள். காலைபொழியும் குண்டுமழையால் சிதைவுறும். ஆனாலும் அவை மறுநாள் இரவு இவனதும் இவனது தோழர்களினதும் பங்களிப்பால் புத்துயிர் பெற்றுப்புதுப் பொலிவுடன் காணப்படும். நித்தமும் குண்டு மழை இந்நிலை கோட்டையில் கொடி ஏறும்வரை நீடித்தது.

இவ்வேலையில் ஈடுபடும் வேளையில் எதிரியின் குண்டு இவன் கைச் சதைக்குட் குடிபுகுந்தது. எடுப்பதற்கு வசதியில்லை. சில நாட்களின் பின் காயம் மாற மீண்டும் கோட்டைக் காவலரண்களில் இவனது செயற்பாடு, மோட்டார் அணியுடன் இணைந்து எதிரியின் நடமாட்டத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்தது. இறுதியில் 26. 09. 1990 அன்று கோட்டையில் கொடி பறந்தது.

முதன் முதலில் இதனை நான் பயிற்சி முகாமில் சந்தித்தேன். மிகவும் கலகலப்பாக சக தோழர்களுடன் பழகும் இயல்பினன். பயிற்சிககாக அணி பிரிக்கும் போது இவனது அணியில் நானும் ஒருவனானேன். பயிர்சியின்போது இவன் ஓட்டத்தில் தன் திறமையைக் காட்டினான். ஓய்வு நோங்களில் யாழ். கோட்டையில்நிகழ்வுகளைமற்றைய போராளிகளுடன் சுவைபடப் பகிர்ந்து கொள்வான். பயிற்சியின்போது ஒரு நாள் ''களத்தில் காத்தான்', சிந்து நடைக் கூத்து நடந்தது. இவன் அதை மிகவும் உன்னிப்பாகப் பார்த்து விட்டு மறு நாள் மாலை பயிற்சி முடிந்து ஓய்வாக இருந்த போது சக தோழர்கள் புடைசூழ மிகவும்அபிநயமாக தமிழ் மாறன் பாட ஆடிக் காட்டினான். இக் கூத்தைப் பயிற்சி முடியும் நாள் வரை வசனங்களை மாற்றி மாற்றி ஓய்வாக இருக்கும் போது பாடி ஆடி மகிழ்விப்பான். இன்று அந்தப் பாடல்களைக் கேட்கும் போது நித்தியின் உருவமும் ஆட்டமும் தான்என் மனத்திரையில் நிழலாகும்.

ஒரு நாள் காலை அனுமதி இன்றி மரத்தில் ஏறி இளநீர் பிடுங்கிவிட்டான். இதனைக் கண்ட பயிற்சி ஆசிரியர் இவனையும் இவனுடன் கூடச் சென்ற இளங்குமரன் குழுவிற்குப் பொறுப்பாக இருந்த என்னையும் அழைத்து ஒவ்வொருவர் கையிலும் ஒவ்வொரு இளநீர், தேங்காய் தரப்பட்டு அன்றைய பயிற்சியை எடுக்கும்படி விடப்பட்டோம், இதற்காக நாம் வெட்கப்பட்டோம். இவனோ மாறாக எதுவும் நடவாததுபோலப் கிடிவிட்டுக் கொண்டு திரிந்தான். ஆனால் தனது தவறை மனதார உணர்ந்து பின் கவலைப்படுவான். இவ்வாறான குறும்புத்தனங்களுக்குத் தனிப்பட்டியலே இவனுக்குண்டு.

பயிற்சி நிறைவு நாள் அன்று பட்டாசு கொளுத்தி மகிழ்ந்தோம். அதுதான் நாம் இறுதியாக ஒன்றாக மகிழ்ந்தநாள். ஒருமுறை அந்த நாளின் சுவையான செயலை வர்ணிக்கநித்தி இல்லையே.

மறுநாள் பூரண ஓய்வு மாலை சகலரும் ஒன்று கூடினோம். நாளை தைப்பொங்கல் அன்று விளையாட்டுப் போட்டி வைப்பது பற்றி பயிற்சி ஆசிரியரின் குரல் மட்டும் ஒலித்தது. அதனைத் தொடர்ந்து சகலரும் சம்மதம் தெரிவித்தார்கள். இவ்விளையாட்டுப் போட்டியில் மரதன் ஓட்டத்தில் முதலாவது பெயர் நித்தி உனுடன் ஐவர் ஓடினார்கள். அதில் தன் முத்திரையைப் பதித்தான். அதே போல் சில்லாலையில் அவனது பெயரைக் கேட்டால் மரதன் ஓட்டக்காரன் என்று கூறும் அளவுக்கு ஊரிலும் சாதனை நிலை நாட்டியுள்ளான்

பயிற்சி முடிந்ததும் ''பிரிவு'' என்ற கொடிய நிகழ்வு எமக்கு புதிய ஒன்றல்ல அதனைக் கண்டு அஞ்சி ஓடுபவனும் நாமல்ல. சில பிரிவுகள் குறுகியவை. சில நிரந்தரமானவை இதனால் நாம் எமது இலட்சியத்தை வீச்சாக்கி விடுதலையை வென்றெடுக்கும் பாதையில் எமது துப்பாக்கி கனல்கக்கும் இலட்சியம் ஈடேறும். நாளைய எமது சுதந்திர விடியலில் எல்லோரும் சங்கமிப்போம்.

நீண்ட இடைவேளைக்குப் பின்னர் 17-03-1991 அன்று நித்தியைக் காணும் சந்தர்ப்பம் கிடைத்தது. சிலாவத்துறைக்குச்செல்லும்புலிவீரர்களுள் மிடுக்காக, ஆயுத பாணியாக மனச்சந்தோஷசத்துடன் செல்வது தெளிவாகத் தெரிந்தது. அவன் அருகில் சென்று மனத்திரையிலுள்ளசந்தோஷமான பல விடயங்களை இருவரும் பகிர்ந்து கொண்டோம். விடைபெறும் வேளையில் மனச்சஞ்சலம், மீண்டும் கதைக்கும் சந்தர்ப்பம் கிடைக்குமா என்பது தான்.

சிலாவத்துறையில் இருந்து வந்ததும் 01-04-1991 அன்று காரைநகர் தாக்குதலுக்கான முன்னேற்பாடுகளைச் செய்வதற்காகச் சென்ற குழுக்களில் நித்தியும் ஒருவன். காரைநகர்த் தாக்குதலில் முன்னேறிய படையுடனான தாக்குதலை மிகத்திறம்படச் செய்தான்.

அங்கு நிற்கும் போது அண்மை கோட்டையில்பட்ட காயத்தினால் கை சரியான வேதனையாக இருக்கு, கையினுள் இருக்கும் ரவுண்ஸ்சைஎடுத்தா சுகமாய்இருக்கும்என்றாலும் இந்த அடிபாட்டை முடித்துவிட்டுச் செய்வம் என்றான. அத்தாக்குதல் முடிந்த பின்னர் கையில் இருந்த ரவுண்ஸ் எடுக்கப்பட்டதும் வைத்தியர் அவனைப் பார்த்து மூன்று மாதக் கட்டாய ஓய்வு எடுக்கும்படி கூறினார்- அவ்வார்த்தை செவிடன் காதில் ஊதிய சங்காகப் பயனற்றுப் போனது. காரணம் ''ஓய்வு'' என்ற பதத்தை புலிவீரர்களால் ஜீரணிக்க முடியாது. அதற்கு நித்தி விதிவலக்கில்லை.

18. 04. 1991 அன்று மன்னார் பரடபுக்கடந்தானில் பெரியளவில் ஓர் ராணுவ நடவடிக்கை நடைபெற்றது. இந் நடவடிக்கையை முறியடிபபதற்காக யாழ்.மாவட்டத்திலிருந்து சென்ற படையணியில் நிததயும் அடங்கியிருந்தான் இவனுடன் நான் பண்டிவிரிச்சானில் வைத்துக் கதைத்த



லெப். நித்தி /புகழேந்தி

போது சிலாவத்துறை அனுபவங்களைக் கூறினான். பரப்புக்கடந்தானிலிருந்து எதிரி புறம்காட்ட இவனது பங்களிப்புச் சிறந்த முறையில் இருந்தது.

10. 07. 1991 அன்று பெரியளவில் ஆனையிறவுப் படைத்தளம் தாக்குதலில் இவன் பசிலன் அணியில் இருந்தான். எதிரியின் நிலைகளை அவதானித்துத் தாக்கினான். இதனால் முகாம் பெரும் சேதமடைந்தது. பசிலன்அணியின் தேவை குறைய இவன் மருத்துவப்பிரிவுக்கு அனுப்பப்பட்டான். மருத்துவப் பிரிவு என்பது இலகுவானது அல்ல. ஒரு புலி வீரனை உருவாக்குவதைவிட புலி வீரனைக் காப்பாற்றுவது புனிதபணி. இவன் ஒரு பகுதிக்குப் பொறுப்பாக நியமிக்கப் பட்டிருந்தான். அவ்வேளையில் நான் காயப்பட்டுச் சிகிச்சைக்காகச் சென்றிருந்தேன், காயத்தின் வேதனையை இவனது சந்திப்பு நீக்கியது. இவனது பராமரிப்பைப் பார்த்த வைத்தியர்கள் பாராட்டிச் செல்வதோடு அவன் மேலும் வளர்ச்சியடைய ஆவன செய்தார்கள்.

மருத்துவப் பிரிவில் நின்ற இவனுக்கு இவ்விடம் உகந்ததாக இருக்கவில்லை. தளபதியிடம் யுத்தமுனைக்குச் செல்லும் அனுமதியைப்பெற்றான். இவனைத்தளபதி நன்கு அறிந்திருந்தமையால் கனரக ஆயுதங்களைக் கையாளும் பயிற்சிக்காக அனுப்பப்பட்டான். பயிற்சி முடிவில் ஜீ.பி.எம் ஜீ உடன் களம் புகுந்தான். ஆனையிறவு முகாம் தக்க வைத்த முயற்சி முடியும் தறுவாயில் வடக்கு கிழக்குப் பாலமாக அமையும் மணலாற்று மாவட்டத்தைக் கைப்பற்றும் நோக்குடன் ''மின்னல்', என்ற பெயரிட்டுபெரும் இராணுவம் நடவடிக்கையை மேற்கொண்டனர். எமது போராளிகள் எதிர்த்தாக்குதல்களை நடாத்தினார்கள். அதில்பங்கு பற்றுவதற்காகச் சென்ற படையணியில் நித்தியும் ஒருவன் உணவு, நீர் பெரும் கஷ்டம் இருந்தும் இவன்மற்றைய போராளிகளுடன் சேர்ந்து எதிரியின் ஆக்கிரமிப்பைத் துப்பாக்கி முனையில் சந்தித்தான் எதிரியின் ''இராட்சதப்பறவைகள்'' குண்டு மழை பொழிந்தன.

எறிகணைகள் கூவின, காடு தீப்பற்றி எரிந்தது. எதிரிகள் கவசவாகனங்களின் உதவியுகன் முன்னேறிக் கொண்டிருதபோது எமது படையணியின் அதிரடித்தாக்குதலினால் நிலை குலைந்து பின்வாங்கிச் சென்றனர். இத்தாக்குதலில் நித்தியின் பங்கு வியக்கத்தக்க வகையில் இருந்தது.

பலாலி முகாமைச்சுற்றியுள்ள மினி முகாம்கள், காவலரண்கள் அழிக்கும் போது முழங்கும் ஜீ பி எம் ஜீ. இவனுடையதாகத்தான் இருக்கும் பல எதிரிகளை அழித்துத் தன் திறமையைத் தொடர்ந்து காட்டினான்.

தெல்லிப்பழையில் எமது பகுதியை நோக்கிச் சரமாரியாகக் குண்டுமழை, ஷெல்கள் குடிமனைகளைநோக்கிஏவப்பட்டன அன்று காலை விடிந்தது. ரவைகள் எமது காவலரண்களைநோக்கிப்பாயட்போர்மூண்டது. எதிரிஎம்மண்ணில் குண்டு பட்டுமண்டியிட பெரும் படை கனரக வாகனத்தின் உதவியுடன் முன்னேறியது எம்படை மனோபலத்துடன் எதிர் கொண்டது அதில் நித்தியும் ஒருவன் இவன் துப்பாக்கி எதிரியின் வரவைத் தடுத்து நிறுத்துவதில் பெரும் பங்கு வகித்துக் கொண்டிருந்தது.

இவ் வேளையில் எமது போராளிஒருவன் குண்டுபட்டு முனகும் சத்தம் கேட்கிறது. நித்தி தனது ஆயுதத்தைப் பாதுகாப்பாக அனுப்பி விட்டு அத்திசையை நோக்கி ஓடுகிறான். சகபோராளிகள்தடுக்க சகோதரபாசம் முன்னே அழைத்துச் செல்கிறது. ஒருவனைத்தூக்க அவன் என்னை விடு, அவனைத் தூக்கிச்செல் என்று காட்ட அவன் காட்டிய திசையை நோக்கி ஊர்ந்து செல்கிறான். அவ்விடம் எதிரியின் எல்லை ஒருவாறாகச் சென்று தூக்கிவரும் போது என்னை விடு எனக் கூறியவன் நிரந்தரமாக விடைபெற்றிருந்தான். இருவரையும் தூக்கி எம்பக்கம் வரும் வேளையில் எதிரி இனம் கண்டுகொண்டான். சரமாரியாக அத்திசையை நோக்கி ரவை பாய்கிறது. நித்தி நிலை எடுத்து இருந்து விட்டு ரவையின் ஓய்வின் பின் மீண்டும் தூக்கி வர முயலும் போது ரவை நித்தியின் உடலைப் பதம் பார்த்தது. எந்த மண்ணை நேசித்தானோ அந்தத் தாயக பூமி அவனை நிரந்தரமாக ஏற்றுக்கொண்டது.

நீண்டவரிசையில் அடுக்கிய பேழையில் உன்புகழ்உடல் நிம்மதியாக நிரந்தரமாகத் தூங்கிக் கொண்டிருந்தது. வழமையாக தூங்கும்போது சொல்லும் வார்த்தையை மட்டும் இன்று நீ சொல்லவில்லை.

பயிற்சி முடிந்து இரவு தூங்கப் போகும் போது நித்தியின் குரல் ஒலிக்கும். நான் நித்திரையானால் எழுப்புவது கஷ்டம். ''அலட்'' அடிச்சா சுருட்டிப்பிரட்டி எழுப்பிப் போடுங்கோ ஆனால்இன்று... மாவீரர் வரிசையில் துயில் கொள்ளும் உன்னை நமது வெற்றி தட்டியெழுப்பும்.

கு. துஷ்யந்தன்

# “ ஐரோப்பாவில் இக்கட்டில் திணறும் தமிழ் இளைஞர் ”

# "ஐரோப்பாவில் இக்கட்டில் திணறும் தமிழ் இளைஞர்"

அருட்திரு. கலாநிதி எஸ். ஜே. இம்மனுவல் செய்தியாளராகவும், கல்லூரி ஆசிரியராகவும், ஐரோப்பிய பல்கலைக் கழகங்களில் இறையியல் விரிவுரையாளராகவும் பணியாற்றியவர். அம்பிட்டிய தேசிய குருமடத்தில் அதிபர் பதவியை வகித்தவர். ஒடுக்கு முறையற்ற நீதியும் நியாயமுமான தேவனின் இராச்சியத்துக்காக உழைப்பவர். இப்போது கொழும்புத்துறை புனித வேரியார் குருமடத்தில் அதிபராகப் பணியாற்றும் வண. இம்மனுவல் அடிகளார், ஆசிய திருச்சபை மன்றத்தில் மறையியல் ஆலோசகராகவும் கடமையாற்றி வருகிறார். யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தில் குருமுதல்வராகவும் (VICAR GENERAL) அண்மையில் நியமனம் பெற்றுள்ளார். அன்னை மொழியுடன் ஆங்கிலம், ஜெர்மன், லத்தீன் மொழிகளில் புலமை மிக்கவர், அவரது ஐரோப்பிய சுற்றுப் பயண அனுபவங்கள் இங்கு தரப்படுகின்றன.

தொகுத்து வழங்குபவர்: **மதன்**

★ அண்மையில் எனது ஐரோப்பிய பயணத்தின் போது ஜெர்மனிக்குச் சென்றிருந்தேன். முக்கிய நகரங்களில், "ஜெர்மனி ஜெர்மானிக்கே. வெளிநாட்டவர்களே வெளியேறுங்கள்!" (OUSLANDERAUS) என்ற சுவரொட்டிகள் பரவலாகக் காணப்படுகின்றன. அரசும் இதற்கு எதிராகத் தீவிரமாகச் செயற்படாமல் தயக்க உணர்வுடன் செயற்படுகின்றது. அந்நியர்களை ஜெர்மானியர் அச்சத்துடன் பார்க்கிறார்கள். இது போன்ற போக்கை எனது முந்திய பயணங்களின் போது ஜெர்மனியில் தான் காணவில்லை.

★ அந்நியர்களின் தொகை அதிகரித்துக் கொண்டு போகப் போகத் தமது தொழில் வாய்ப்புக்களும் குறைந்து போகும் என்று ஜெர்மானியர்கள் கருதுகிறார்கள் இந்தச் சூழலில்தான் எமது தமிழ் இளைஞரும் சிக்கியுள்ளார்கள். 2-வது உலக யுத்த காலத்தில் ஹிட்லரின் இராணுவத்துக்கென உருவாக்கப்பட்ட பங்கர்களில் தமிழ் இளைஞருக்குப் புகலிடம் வழங்கபபட்டுள்ளது சுதந்திரமான நடமாட்டத்துக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. சுய அனுபவங்களையும், உணர்வுகளையும் இவர்கள் உளளூர் மக்களுடன் பகிர்ந்து கொளள முடியாத நிலை- இவ்வாறு கூறுகிறார் ஆசிய திருச்சபை மன்றததின் மறையியல் ஆலோசகரும், புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி அதிபருமான வண. கலாநிதி எஸ். ஜே. இமமனுவல்.

★ கனடாவில் நிலைமை வேறுமாதிரியானது. தமிழ் அகதிகளைப் பொறுத்தவரை கனேடிய அரசு அதன் தாராளத்துக்குப் பெயர் போனது. தமது முன்னோர்கள் வழியால் தாமும் கனடாவில் குடியேறியவர்கள் என்ற மன உணர்வு கனேடியர் மனதில் இழையோடி நிற்கின்றது. இந்த மனப்போக்கும் நாளடைவில் மாற்றமடையலாம். தமிழர் செறிவாயுள்ள பகுதிகளில் தமிழ் மொழி வகுப்புகளை ஆரம்பித்து நடத்தக் கனேடிய அரசு நிதி உதவி வழங்குகிறது என்ற செய்தி உங்களுக்கு ஆச்சரியத்தைத் தரலாம். ஆனால் அதைவிட ஆச்சரியம் என்னவென்றால், அங்குள்ள தமிழர் தமது பிள்ளைகளுக்கு தமிழ் மொழியைக் கற்பிக்க விரும்புகிறார்களில்லை என்பதாகும். அங்கு வாழும் தமிழர் மத்தியில் ஆங்கிலமோகமே மேலோங்கி நிற்பதைக் காணக் கூடியதாக உள்ளது. இத்தகைய விபரீதம் தமிழர் தமது தனித்துவத்தை இழக்கச் செய்துவிடும். தமிழ் இளைஞர் சமீபகாலங்களில் ஐரோப்பிய பெண்களுடன் திருமணத்தால் இணைக்கப்பட்டு வருகிறார்கள். இந்த பின்புலத்தில் இந்தத் தமிழர்கள் தமது அந்திம காலத்தை ஐரோப்பிய வயோதிபர் இல்லங்களில் கழிக்க வேண்டிய நிலை உருவாகும் என்கிறார்.

★ கனடா போல் அல்லாமல் ஜெர்மனியில் நிலவும் வெளிநாட்டவர் எதிர்ப்பு உணர்விற்கு வேறுபலகாரணங்களும் உள்ளன. பல்கேரியர், ருமேனியர், செக் மற்றும் போலந்து நாட்டவர் ஜெர்மனிக்குள் நுழைவது ஜெர்மனியரின் தொழில் வாய்ப்புகளைக் குறைத்து வருகின்றது. கம்பியூட்டர்கள் அறிமுகம், ஆட்டோமேஷன் எனப்படும் தானியங்கி மயமாக்கலும் ஜெர்மனியில் சமூக - பொருளாதாரப் பிரச்சினைகளைத் தோற்றுவித்திருப்பதை அவதானிக்க முடிகிறது. ஐரோப்பிய பொது நாணயத்திட்டமும் தற்காலிகமான ஒரு நெருக்கடியை உண்டுபண்ணியுள்ளது.



அருட் திரு
எஸ். ஜே. இம்மனுவேல்

ஜெர்மன் மார்க்கையும், சுவிஸ் பிறாங்கையும் தவிர இத்தாலிய லிரா, டொலர், ஸ்ரேளிங் பவுண் ஆகியன தள்ளாடத் தொடங்கியுள்ளன இந்நிலையில் இந்தியாவின் முன்னுதாரணத்தைக் கொண்டு ஜெர்மனியும் இலங்கைத் தமிழ் அகதிகளை வெளியேற்றப் பார்க்கிறது. மேலும் இலங்கை அகதிகளைப் பொருளாதார அகதிகளாகவே ஜெர்மனிய அரசு கருதுகிறது. பொதுவாக அகதிகள் வருகையைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் ஜெர்மன் அரசியல் அமைப்புச் சட்டம் ஷரத்துப் 16-இல் திருத்தமும் செய்யப்பட்டுள்ளது. மற்ற ஐரோப்பிய நாடுகளும் தமது குடிவரவுச் சட்டங்களை இறுக்கமாக்கியுள்ளன என்று கூறினார்

★ ஐரோப்பியநகரங்களில் வாழும் தமிழர் மத்தியில் சமூக ஒத்திசைவு மிகக் குறைவாகவே காணப்படுகிறது. திருமணச் சடங்குகளையும், பிறந்ததின விழாக்களையும் பெரும் எடுப்பில் கேளிக்கையாகக் கொண்டாடுகிறார்கள். இந்த வைபவங்களில்தான் தமிழர்கள் ஒன்றுகூடுவதைப பல ஐரோப்பிய நகரங்களில் என்னால் காணக் கூடியதாக இருந்தது. மற்றும்படி 'வீடியோப் பண்பாடு' (VIDEO CULTURE) தமிழர் மத்தியில் வேசமாகப் பரவி வருகிறது. ஜெர்மனி, பிரான்ஸ், கனடா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் பலதரப்பட்ட அபிப்பிராயங்கள் உள்ளன தமிழ் சஞ்சிகைகள் வெளிவருகின்றன. தமிழரிடையிலான தொடர்புகள் ஓரளவு பத்திரிகைகள் மூலமாகவும் நிலை நாட்டப்படுகின்றன. ஆனால் பத்திரிகைகள் பயன் பொருத்தமாக இல்லாமல் 'ஊர்க்கதை' எழுதும் (GOSSIP) பத்திரிகைகளாகவே உள்ளன. கனடாவில் தமிழ்ப் பத்திரிகைகள் இலவசமாகவே தரப் படுகின்றன என்று சொல்லும் அவர் —

★ ஐரோப்பாவில் வாழும் தமிழர் பலர் மத்தியில் சொந்த நாட்டைப் பற்றியும், மக்கள் படும் கஷ்டங்களைப் பற்றியும் கரிசனை மிகக் குறைவாகவே காணப்படுகிறது. அகதிகளாக ஐரோப்பாவில் குடியேறிய தமிழர் தமதுஉடன் பிறப்புக்களுக்காக ஒரு எதிர்ப்பு மையத்தை ஐரோப்பாவில் உருவாக்க முடிந்த வரையில் முயற்சிக்கிறார்களில்லை. முழு நேரமும் வேலை செய்வது அல்லது ஓய்வு நேரங்களில் வீடியோ பார்ப்பதுடன் எல்லாம் முடிந்து விடுகிறது. பல தமிழ் சஞ்சிகைகளை வெளியிடுவதைவிட காத்திரமான ஒரிரு பத்திரிகைகள் ஆங்கிலம, ஜெர்மன், பிரஞ்சு மொழிகளில் வெளியிட்டாலே போதும். எமது பிரச்சினையை ஐரோப்பியர் அறிந்து கொள்ள இந்த முறை பெரிதும் உதவும். ஐரோப்பிய நகரங்களில் பணபலமுள்ள இலங்கைத் தமிழர் பலர் வாழ்கிறார்கள். அதே போல் ஐரோப்பிய மொழிகளில் பாண்டித்தியம் உள்ள சிலரையும் சந்தித்துள்ளேன். இவர்கள் கூட்டு முயற்சியில் ஐரோப்பிய மொழியில் பத்திரிகையை வெளியிடலாம். ஆனால் இவர்கள் நாட்டுப் பற்று இல்லாமல் சும்மா இருப்பது சுகம் தரும் என்று வாழ்வதைக் காணக்கூடியதாகஉள்ளது என்றார்.

★ சில தொழில்களைச் செய்வதில்லை என்பதை ஐரோப்பிய சமூகம் ஒரு சித்தாந்தமாக வரித்துக் கொண்டுள்ளது. இந்தப் பின்னணியில் எமது இளைஞர் ஐரோப்பியா செய்ய விரும்பாத தொழில்களைச் செய்வதை எனது ஐரோப்பிய பயணத்தின் போது காணக் கூடியதாக இருந்தது. யாழ். குடாநாட்டின் சாதியோடு ஒட்டிய தொழில்கள் என்று கூறப்படும் தொழில்களையும் எமது இளைஞர் எவ்வித சலசலப்புமின்றிச் செய்வதையும் அவதானிக்க முடிந்தது. அவசியம் அல்லது தேவை கருதி எம்மவர்களின் குறுகல் நோக்குகளில் ஏற்பட்டுள்ள மாற்றம் வரவேற்கத் தக்கது. ஆனால் ஐரோப்பாவில் வழக்கமான சீதோஷ்ண ஏற்ற இறக்கத்தை குறிப்பாகக் குளிர் காலத்தைத் தாக்குப்பிடித்துத் தோட்டங்களிலும், உறைபனியில் எந்திரப் பாங்கற்ற தொழில்களையும் செய்வது சாதாரண காரியமல்ல. இந்தத் தொழில்கள் பணம் ஈட்டும் தொழிலாக மாறிவிட்ட ஒரு சூழ் நிலையில் எமது இளைஞர் உடல் வருத்தி உழைப்பதை ஐரோப்பாவின் பல பாகங்களில் காணக்கூடியதாக இருந்தது.

அவர்கள் இக்கட்டில் திணறுகிறார்கள். ஐரோப்பாவிலுள்ள தமது பிள்ளைகள் சுக வாழ்வு வாழ்க்கை வாழ்கிறார்கள் என்று பெற்றோர் கருதினால் அது ஒரு பொய்த் தோற்றமாகும். ஐரோப்பியர்களை விட எமது இளைஞரின் வாழ்க்கை ஒரு புறம்பான வழியில் போகிறது தலைமயிரை நீளமாக வளர்த்து ஐரோப்பிய சமூகத்துடன் பொருத்தப்பாடு இல்லாத நடைஉடை பாவனையோடு வாழ்க்கை நடத்துகிறார்கள். இதனால் ஐரோப்பிய சமூகத்திலிருந்து அந்நியப்படுத்தப்பட்டுள்ளார்கள். பிரதான நீரோட்டத்தோடு இவர்களால் இணைந்து கொள்ள முடியாதிருக்கி

[5 ஆம் பக்கம் பார்க்க]

## மாவீரரை வணங்குவோம்

காலத்தை வென்றவர் எம் மாவீரர்
கருவியை ஏந்தி நாம் வருகின்றோம்
தாயகம் காத்திடும் தெய்வம் அவர்
வீரத்தை வணங்கி நாம் வருகின்றோம்.

ஆணாய் பெண்ணாய் இணைந்து நின்றார்
கழுத்தில் நஞ்சை அணிந்து வென்றார்
தலையில் தமிழை சுமந்து நின்றார்
இடுகாட்டினுள் வாழ்வதை அமைத்துக் கொண்டார்.

குண்டு மழைக்குள் நடந்து சென்றார்
நின்று அதற்குள் சிரித்து வென்றார்
குருதிச் சேற்றில் நடந்து சென்றார்
குறைவிலா வாழ்வதை அமைத்துத் தந்தார்

தாயக விடுதலை படைத்துச் சென்றார்.
தாவியே எதிரியை அழித்து வென்றார்
முதலும் முடிவும் ஆகி நின்றார்
முடிவிலா உலகத்தில் நிறைந்து விட்டார்.

யோ. யோகி

சிறுகதை

# சிணுங்கி

அதிபரின் காரியாலயத்திற்கும், பாலர் வகுப்புக்குமிடையில் 'எஸ்' வடிவமான கம்பியில் தொங்கிக் கொண்டிருந்த தண்டவாளத் துண்டில், சுவரின் விளிம்பில் வைக்கப்பட்டிருந்த ஒன்றரையடி நீளமான கம்பியை எடுத்து அடிக்கிறான் ஒரு மாணவன்.

இப் பாடசாலையின் மணி அதுதான்! உள்ளூர் கண்டுபிடிப்பு!

இரண்டாவது பாடம் முடிந்து மூன்றாவது பாடம் ஆரம்பம். ஆசிரியர்கள் ஆடி அசைந்து வகுப்புகளுக்கு மாறுகின்ற படலம்!

பத்தாம் ஆண்டு- கணித பாடம் முடிந்து- கணித ஆசிரியர் தனது டயறியைப்புரட்டி, எழுதப் பட்டிருந்த நேர சூசிக்குள் சுழியோடி அடுத்த வகுப்பைக் கண்டு பிடித்து... பத்தாம் ஆண்டு வகுப்பறையை விட்டுப் புறப்படுகின்றார்.

பத்தாம் ஆண்டிற்கு இப்போது தமிழ்ப் பாடம் கிருஸ்ணன் மாஸ்ரர்.

என்ன காரணமோ தெரியாது, கிருஸ்ணன் மாஸ்ரரை 'பாலா' என்று தான் ஆசிரியர்கள் அழைப்பார்கள்.

பாலா மாஸ்ரர் -

அளவான உயரம், திடகாத்திரமான ரோமம் நிறைந்த உடற்கட்டு, தூய வெள்ளை உடுப்பு... சப்பாத்து...

ஐதான தலைமயிர், தடித்த மீசை... மிகவும் சாதுவானவர் ஆசிரியப் பணியைத் தொழிலாக்காமல், பணியாகவே கருதி நடக்கின்ற ஒரு ஆசிரியர்.

பத்தாம் ஆண்டில் நேற்றைய தினம் மகாபாரதக் கதையை ஆரம்பித்திருந்தார். இப்படியான கதைகளை மாணவர்கள் சோர்ந்து போகாதவகையில் கூறுவதில் பாலா மாஸ்ரர் மிகவும் வல்லவர். நேற்றுப் பத்தாம் ஆண்டில் -

மகாபாரதத்தில் பஞ்சபாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்குமிடையே நடந்த சம்பவங்களைசம கால நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி அவர் விளக்கினார்.

''சேர் அடுத்த பாடத்தையும் எடுத்துக் கதையை முடிச்சுப்போட்டுப் போங்கோ.'' என்று மாணவர்கள் நேற்றுக் கேட்கும் அளவிற்குப் பாலா மாஸ்ரர் கதை கூறினார்.

இப்போது மாணவர்கள் பாலா மாஸ்ரரை மிக ஆவலோடு எதிர்பார்க்கின்றனர்.

வகுப்பின் கடைசி வரிசையில் 'சிணுங்கி' அமர்ந்திருக்கின்றான்.

சிணுங்கி- பாடசாலைஇடாப்பில் இவனது பெயர் செல்வக்குமார் என்று எழுதப்பட்டிருந்ததாகவும்- சிணுங்கி என்றுதான் அதிகமானோரால் அழைக்கப்படுகின்றான்.

சிணுங்கி என்பது காரணப் பெயர். இவன் சிறுவயதாக இருக்கின்றபோது சாதாரணமாகப் பயமுறுத்தினாலும் அழத் தொடங்கி விடுவானாம். 'தொட்டாச் சிணுங்கி' என்பது குறுகி இப்போது 'சிணுங்கி' என்ற சொல் மட்டும் பெயராக வழங்கி வருகின்றது,

மேசையில் மெதுவாகத் தாளம்போட்டு ஏதோவொரு பாட்டை முணுமுணுக்கின்றான்.. மிகவும் நன்றாகப் பாடுவான்.

இந்த வகுப்பில் சிணுங்கி ஒரு வித்தியாசமான மாணவன்... பரிதாபமானவன்!

கால்கள் இரண்டும் சூம்பி முறிந்த முருங்கைமரக் கிளையிலுள்ள முருங்கைக்காய் சத்தின்றி வெய்யிலில் வதங்கிச் சுருண்டு போயிருப்பது போல் முழங்காலுக்குக்கீழ் அவனது கால்கள். ஆடிக்கொண்டிருக்கும், எட்டு வயதின் பின்புதான் தடியை ஊன்றி இவன் நடக்க ஆரம்பித்தான்

எட்டு வயதில் இவன் பாலர் வகுப்பில் சேர்க்கப்பட்டான். இப்போது 18 வயது மீசைமயிர் கறுக்க ஆரம்பித்து விட்டது.

தடி ஊன்றி உயரம் பாய்கின்ற ஒரு விளையாட்டு வீரனைப் போல் நான்கடி உயரமான ஒரு கம்பை ஊன்றி ஒவ்வொரு அடித் தூரத்தையும் இவன் நகர்கின்ற கோலத்தைக் கண்டால் கல்நெஞ்சனுக்கும் மனமிரங்கும்.

பாடசாலை தொடங்க வகுப்பில் வந்து அமர்ந்தால் பாடசாலை விடும்போதுதான் தனது இருப்பிடத்தைவிட்டு எழும்புவான் . இடைவேளையின்போது தண்ணீர் குடிக்கக் கூட அவனால் போக முடிவதில்லை

விளையாட்டுமைதானத்தில் மாணவர்கள் குதூகலமாக விளையாடுவார்கள்... சிணுங்கி வகுப்பிலேயே இருப்பான்... இடைவேளையின் போது மாணவர்கள் ஐஸ் பழம்வாங்கிச் சூப்புவார்கள்... சிணுங்கியிடம் காசிருக்காது... ஏக்கத்தோடு அமர்ந்திருப்பான்... ஏதாவது கொண்டாட்டம் வந்துவிட்டால் சகல மாணவர்களும் வழமையைவிட அழகாக நிற்பார்கள்... ஆனால் சிணுங்கி... அதே களிசான் சேட்டுடன் இருப்பான்.

இவைகளைவிட இலங்கை இராணுவத்தினர் இக்கிராமத்தைத் தாக்கியபோது இந்திய இராணுவம் இப்பகுதியை ஆக்கிரமித்த போதும் இவன் ஓட முடியாமல் தவித்த தவிப்பு ..

இந்திய இராணுவத்தால் துரத்தப்பட்டு மக்கள் எல்லோரும் நல்லூர் கந்தசுவாமி கோவிலில்தஞ்சமடைந்தனர்.. பெருமழை . கோவிலுக்குள் இடமில்லை. சிணுங்கி கோவில் தாழ்வாரத்தில் தப்புத் தண்ணியில் சப்பாணி கொட்டி அமர்ந்திருந்தான்,

'நல்லூர்க் கந்தா... எனது காலைச் சுகமாக்கு' மனவேதனையில் சிணுங்கி இப்படி வேண்டிக்கொண்டான்,

வகுப்பை நோக்கி வந்து கொண்டிருந்த பாலா மாஸ்ரர் எதிரே வந்த ஒருஆசிரியரோடு ஏதோ கதைத்துக் கொண்டு நிற்கின்றார்.

சிணுங்கியால் சரிவர நடக்க முடியாவிட்டாலும்பொதுவிடயங்களில் முன்னணியில் கலந்து கொள்வான்.

சில தினங்களுக்கு முன்பு போராளிகள் தங்களின் பாதுகாப்பரண்களை அமைப்பதற்காக மண் மூடைகள் தயாரித்துக் கொண்டிருந்தனர். அங்கே சிணுங்கி, மண் நிறைக்கப்பட்ட சாக்குகளின் வாய்களைத் தைப்பதற்காக சாக்கூசியில் கயிற்றைக் கோர்த்துக் கொடுத்துக் கொண்டிருந்தான்!

நேற்றைய தினம் இக்கிராமத்திற்கு ஒரு போராளியின் பூதவுடல் கொண்டுவரப்பட்டபோது... தென்னோலைக்குருத்தில் தோரணங்கள் பின்னிக் கொடுத்தான்!

''சிணுங்கி... நீ எங்களோடு போராடவாறியா'' என்றுஒரு போராளி இவனைக் கேட்டபோது முருங்கைக்காய் போல் சூம்பிப்போன தனது கால்களைப் பார்த்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டான்.

பாலா மாஸ்ரர் வகுப்பறைக்குள் வருகின்றார்.

''சேர் நேற்றையில் கதை மிச்சத்தைச் சொல்லுங்கோ ''

''சொல்றன் ..''

பாலா மாஸ்ரர் கரும்பலகையை அழித்துத் துப்புரவாக்கி, 'டஸ்ரரை' ஒரு புறமாக வைத்து விட்டு, மேசையில் படர்ந்திருந்த சோக்கின் வெண் துகள்களை வாயால் ஊதித் துப்புரவாக்கி, கதிரையில் அமர்கிறார்.

வழமை போல் வகுப்பை நோட்டம் விடுகிறார்.

'சேர்... மிச்சக்கதையைச் சொல்லுங்கோ'' நகுலநாதன் கூறுகிறான் அவன்தான்இந்த வகுப்பு மொனிற்றர்.

''நேற்று நான் சொன்ன கதையிலை ஏதவது சந்தேகம் இருந்தால் கேளுங்கோ ..' பாலா மாஸ்ரர் கூறுகிறார். நேற்றைய வகுப்பில் பஞ்சபாண்டவர்கள், கௌரவர்களோடு யுத்தம் செய்வதைவிட வேறு வழிகள் எதுவும் இல்லையென்ற முடிவுக்கு வந்தது வரை பாலாமாஸ்ரர் கதையைக் கூறியிருந்தார்.

''செல்வக்குமார்... ஏதாவது கேள்வியிருக்கா...'' செல்வக்குமாரை எல்லோரும்சிணுங்கி என்று அழைத்தாலும் பாலா மாஸ்ரர் மட்டும் அவனைச் செல்வக்குமார் என்றுதான் அழைப்பார்.

பாலா மாஸ்ரர் இரக்கமுள்ளவர் இதனால் சிணுங்கியோடு மிகவும் நெருக்கமாகப் பழகுவார். பல சந்தர்ப்பங்களில் அவனைத் தனது சயிக்கிளில் ஏற்றிக் கொண்டுபோய் வீட்டில் விட்டிருக்கிறார்.

''இல்லை சேர்...''

பாலா மாஸ்ரர் கதையைத் தொடர்கிறார்.

''பஞ்சபாண்டவர்கள் கௌரவர்களிடம் கடைசியாக ஐந்து வீடுகளை யாவது தரும்படி கேட்டனர். கௌரவர்கள் மறுத்துவிட பஞ்சபாண்டவர்கள் யுத்தத்திற்குத் தயாரானார்கள்.

கௌரவர்களை வெல்வதற்கு சிவபெருமானிடமிருந்து 'பாசுபதம்' என்ற ஆயுதத்தைப் பெறவேண்டுமென பஞ்சபாண்டவர்களுக்கு யுத்ததந்திரம் விளங்கியவர்கள் ஆலோசனை கூறினர். பஞ்சபாண்டவர்களும் இதை உணர்ந்திருந்தனர்.

அருச்சுனன் பாசுபதம்என்ற ஆயுதத்தைப் பெறுவதற்காக சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்யத் தயாரானான்.

நடுக்காட்டில், வலதுகாலில் நின்று இடதுகாலை மடித்து இடதுகால் பாதத்தை வலது முழங்காலோடு பதித்து கைகள் இரண்டையும் தலைக்கு மேலுயர்த்திக் கூப்பி கண்களை இமைக்காது வானத்தை நோக்கியபடி அருச்சுனன் தவத்தை ஆரம்பித்தான்.

அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்ட அருச்சுனன் அப்படியொரு கடும் தவம் புரிந்தான். .....

கதையை நிறுத்திய பாலா மாஸ்ரர் வலது கைச் சுட்டு விரலால் கண்ணாடியை மேல் நோக்கித் தள்ளிவிட்டு, சில வினாடிகள் அமைதியாக நின்று .....எதையோ சிந்தித்து .....கதையைத் தொடர்கிறார்.

எங்களுடைய போராளிகள் ... பேரின அரசின் அடக்குமுறையிலிருந்து விடுபட்டு, சுதந்திரமாக வாழ்வதற்காக ... வரலாறு கண்டிராத தியாகங்களைச் செய்கிறார்கள்....

...அவ்வளவு தூரம் மிகப் பெரிய தவத்தைச் செய்ய அருச்சுனனுக்குத் துணையாக இருந்து அவனது ஆன்மீக பலம் ..

...இன்று... உலகம் வியக்கும் அளவுக்குநமதுவிடுதலைப் போராளிகள் பலமாக உள்ளதற்கும் அவர்களின் ஆன்மீக பலந்தான் காரணம்... ஆன்மீக பலத்தினால்தான் மரண பயத்தை வெல்லமுடியும் ..... பாலா மாஸ்டர் மீண்டும் சில வினாடிகள் அமைதியாக நிற்கின்றார். வகுப்பில்பேரமைதி! மாஸ்டர் தொடங்கிறார்....

நாட்கள் நகர்ந்தன... அருச்சுனன் சோர்வடையவில்லை.

சிவபெருமான் அருச்சுனனின் தவ வலிமையைக்கண்டு ...மெச்சி .. அவனுக்குத் தரிசனம் கொடுத்தார்...

'பாசுபதம்' என்ற அந்த வல்லமைமிக்க ஆயுதத்தையும் வழங்கினார்... கதையை நிறுத்திய பாலா மாஸ்ரர் தனது கைக்கடிகாரத்தைப் பார்க்கின்றார்.

பாடம் முடியப் போகின்றது .

வகுப்பில் அமைதி...

பாடம்முடிவதற்கான மணி அடிக்க இன்னும் சில நிமிடங்கள் இருக்கின்றன .. பாலா மாஸ்ரரின்சிந்தனையோட்டம் புதியதொரு வாய்க்காலில் பாய ஆரம்பிக்கின்றது.

' சிவா... அருச்சுனனுக்கு சிவபெருமான் காட்சிகொடுத்ததுபோல் உங்களுக்கு சிவபெருமான் காட்சி தந்தால் என்னவரம் கேட்பீர்கள்'' .... சிவபாதவிருதயர்என்ற மாணவனிடம் பாலாமாஸ்ரர் கேட்கிறார். மணிஅடிக்கும் வரை நேரத்தைப் போக்காட்டும் யுக்தி .. சிவபாதவிருதையார் எழுந்து நிற்கின்றான். இந்த வகுப்பிலுள்ள மாணவர்களில் சிவபாதவிருதயர் மிகவும் வசதியுள்ளவன். அவனுக்கு எந்தக் குறையும் இல்லை அவன் எதுவுமே பேசாமல் ஆசிரியரைப் பார்த்துச் சிரிக்கின்றான், மாஸ்டர் அடுத்த மாணவனை நோக்குகிறார்

''சிவபாலன் நீங்கள் என்ன கேப்பியள்'' சிவபாலன் என்ற மாணவனிடம் பாலா மாஸ்ரர் கேட்கிறார்.

சகல மாணவர்களும் பாலா மாஸ்ரரையே பார்த்தபடி சிவபாலனின் பதிலை எதிர்பார்த்து அமர்ந்திருக்கின்றனர் ஆனால், சிணுங்கி .. தலையைக் குனிந்தபடி அமர்ந்திருக்கின்றான். அவனது வலதுகை விரல்கள் தலைமயிருக்குள் புதைந்து கிடக்கின்றன.

பாலா மாஸ்ரர் கேட்கின்ற, கேள்வியை தானே, தனக்குள் கேட்கின்றானா ..! அவனிடம் பாலா மாஸ்ரர் இந்தக்கேள்வியைக் கேட்டால் ..

''நல்லூர் கந்தா எனது காலைச் சுகமாக்கு'' சிணுங்கி ஏற்கனவே இறைவனிடம் இப்படிக் கேட்டுவிட்டான்.

சிவபாலன் எழுந்து நிற்கிறான் .. சிவபாலன் நகைச்சுவையானவன். உதைபந்தாட்ட வீரன். ''வரப்போற பந்தடியிலை... எங்கடை பள்ளிக்கூடம் சம்பியனாக வரவேணும் எண்டு கேப்பன்''.

பாலா மாஸ்ரர் சிரிக்கிறார். மாணவர்களும் சிரிக்கின்றனர்.

ஆனால், சிணுங்கி ..குனிந்த தலை நிமிராமல் இருக்கிறான்.

''திருவாசகநாதன்... நீங்கள் என்ன கேப்பியள்'' அடுத்த மாணவனிடம் கேட்கிறார். திருவாசகநாதன் தீவுப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து இங்கு வந்து கற்கும்மாணவன் தீவுப்பகுதியை இராணுவத்தினர் ஆக்கிரமித்தபோது சகலதையும் இழந்து வந்த குடும்பங்களில் இவனது குடும்பமும் ஒன்று

''நாங்கள் திரும்பவும் எங்கடை சொந்த இடத்துக்குப் போக வழி செய்ய வேண்டும் எண்டு கேப்பன்.''

சிணுங்கி, சகலதையும் கேட்டபடி இருக்கிறான் .. தலை நிமிரவில்லை....நல்லூர் கந்தா எனது காலைச் சுகமாக்கு .. அவனிடம் ஆசிரியரின் கேள்விக்குரிய பதிலுண்டு.

'' கெங்காதரன் .. நீங்கள் என்ன கேப்பியள் ..''

'' ஆமிக்காறர் சுட்டுக் கொன்ற எனது சகோதரனைத் திரும்பத் தரும்படி கேப்பன் ..'' இவனது சகோதரன் ஒருவன் வவுனியாவில் இராணுவத்தினரால் அநாவசியமாகச் சுட்டுக் கொல்லப் பட்டான்!

வகுப்பில் துயரம் கலந்த அமைதி...

சிணுங்கி இப்போது தலையை நிமிர்த்துகிறான். அவனது இதயம் சிந்தனையில் குமைவதை அவனது முகம் காட்டுகின்றது,

''நகுலநாதன்... நீங்கள் என்ன கேப்பியள்...''

''ஆனையிறவுப் போரில்

கே. ஆர். டேவிட்

(5ஆம் பக்கம் பார்க்க)

மாவீரர் நினைவாக......

5-ம் ஆண்டு நினைவஞ்சலி

# மாவீரர் நினைவாக......

**மாவீரர்களே!**

**நீங்கள் களத்தில் மடியும் கடைசி நேரத்தில்**
**என்ன நினைத்தீர்?**
**அந்த நினைவைச் சுமக்கின்றோம்**
**அதனை நிச்சயம் முடிக்கின்றோம்.**


## வான்மதி நகைமாடம்

(தங்கப்பவுண் நகை வியாபாரம்)
இல. 171, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## தமிழ் நிலா நகைமாடம்

(தங்கப்பவுண் நகை வியாபாரம்)
பேருந்து நிலையம்
நெல்லியடி - கரவெட்டி





## தமிழ்மதி நகைமாடம்

(தங்கப்பவுண் நகை வியாபாரம்)
8./6 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்,

## தமிழ்பரிதி நகைமாடம்

(தங்கப்பவுண் நகை வியாபாரம்)
இல. 15, புதிய சந்தை,
சாவகச்சேரி.





## அழகுநிலா நகைமாடம்

(தங்கப்பவுண் நகை வியாபாரம்)
213, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.




(சி-5488)

---

## 5 - ம் ஆண்டு நினைவஞ்சலி

| வீரப்பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 06 | 27 |
| 06 | 11 |
| 1968 | 1987 |



### வீரவேங்கை துமிலன்

[ இராஜகோபால் ரவிச்சந்திரன் ]
முள்ளிப் பொத்தானை 9 -ம் யூனிற்
தம்பலகாமம் - திருமலை

முள்ளிப் பொத்தானையிலே முத்தமிட்டு வளர்ந்தாய்
முள்ளெனக் குத்தியபகை முடிக்க நீ எழுந்தாய்
ஈழத் தலைநகரின் இணையற்ற மறவனும் நீ
ஈன்ற தமிழன்னைக்காய் மாண்ட மகனும் நீ
காலைக் கதிரவன் போல் களத்தில் குதித்தாயே
மாலை மறைந்தது போல் மண்ணிற் சிவத்தாயே
ஆண்டுகள் ஐந்தாகி ஓடி மறைந்தாலும்
ஆழமாய்ப் பதிந்த உன் நினைவு மறக்காது

உன் பிரிவினுள்,
பெற்றோர், சகோதரர்கள்,
உறவினர்கள், நண்பர்கள்.

( 3715 )

---

## நினைவூட்டல்

யாழ். இந்து பழையமாணவர் சங்கம்
உறுப்பினர்களுக்கு-

**எமது விஷேட பொதுக்கூட்டம்**

92.11.29.ம் திகதி காலை 10.00மணிக்கு
இடம்பெறும்.

பாலசுப்பிரமணியம் தவபாலன்
செயலாளர்
யா. இ. க.
ப. மா. ச.

(சி-5475)

# நவம்பர் 21 இலிருந்து நவம்பர் 27 வரை ஒரு சிப்பாயின் நாட்குறிப்பிலிருந்து




"விஜித...... விஜித......
டேய் விஜித...
நித்திரையா கொள்கிறாய்?... எழுந்திரு... எழுந்திரு...''

விஜிததிடுக்குற்றுவிழித்தான். கைகள் தன்னியல்பாக ரைஃபிளைத் தேடின. ரைஃபிள் சில்லிட்டது. இருள், ஒன்றும்தெரியவில்லை. பக்கத்தில் வைத்த ரோச்சைத்தேடிஎடுத்துஇடதுகைமீதுஒளியைப்பிடித்தான்... "ஓ 10.20 மணி... இன்னும் என்னுடைய காவல் நேரம் முடியவில்லை...'' "விஜித... என்ன நித்திரை வந்துவிட்டதா?... நேற்று முன்தினம் பெரியமாத்தயா சொன்னதை மறந்தா விட்டாய்?'' காவலரணின் மறுமூலையிலிருந்தபடி சுமண கேட்டான் விஜித நிமிர்ந்துஉட்கார்ந்தான். ஆழமாகக் கொட்டாவீ விட்டான். காவலரணிற்கு முன்பு இருள் மூடிக் கிடந்தது. பனி உயிர்க்கும் இரவு ரகசியம் போல வீசும் காற்று எப்பொழுதும் போல நட்சத்திரங்கள் மட்டும் இவர்களுடன்விழித்திருந்தன. விஜித ஒரு சிகரெட்டைப்பற்ற வைத்துக்கொண்டான். சுமண மறுபடியும் எச்சரித்தான். "நித்திரை கொள்ளாதே பெரிய மாத்தயா சொன்னது நினைவிலிருக்கட்டும்...''

பெரிய மாத்தயா - முகாம் பொறுப்பதிகாரி - சில தினங்களின் முன்பு எல்லோரையும் அழைத்து எச்சரித்தார்...... "இன்னும் சில தினங்களில் கொட்டியாவின் மாவீரர் வாரம் ஆரம்பமாகிறது. அந்த நாட்களில் கொட்டியாவிடம் ஒரு புதுச்சக்தி உருவாகியிருக்கும். இறந்துபோன அவர்களுடைய சகாக்களின் நினைவுகள் அவர்களை உருவேற்றும். இந்நாட்களில் அவர்கள் வெற்றியின் பொருட்டாக எதையும் செய்வார்கள். நீங்கள் எல்லோரும் கவனமாக இருக்க வேண்டும் காவல் நேரத்தில் ஒருவரும் அயர்ந்திருக்கக் கூடாது வேறு சிந்தனைகள் உங்களது உசார் நிலையைக் குழப்புவத கள். எந்த ஒரு நுட்பமான சத்தத்தையும் உற்றுக் கேளுங்கள் அநேகமாகநடுஇரவிலோ அல்லது அதிகாலைக்குச் சற்று முன்பாகவோ அவர்கள் வரக்கூடும். இருள் எப்பொழுதும் அவர்களிற்குச் சாதகமானது. அவர்கள் புயலைப்போல வருவார்கள்.. குறிதவறாமல் தாக்குவார்கள்...'' பெரிய மாத்தயாவின் எச்சரிக்கை எல்லாச் சிப்பாய்களையும் திகிலடையச் செய்தது கடற்படைத் தளபதியின் மரணம் அவர்களைஏற்கனவே உலுப்பியிருந்தது விஜித அடிக்கடி இடுப்பில்நெருடும் தாயத்தைத் தடவிப் பார்த்துக்கொண்டான். போன தடவை அவன் லீவில் சென்றிருந்த போது அவனுடைய அம்மா அதைத்தந்தாள். இவனுக்காக, திஸமகாராமையிலிருந்து மந்திரித்து எடுத்து வந்த தாயத்து அது. அதை இடுப்பில் கட்டி விடுகையில் அம்மா சொன்னாள்...'புத்தா நீ வெற்றி பெறாவிட்டாலும் உயிரோடு பத்திரமாக வீடு திரும்பினால் போதும்..'. சில மாதங்களிற்கு முன்புவரை விஜித ஆபத்தான சமயங்களில் தாயத்தை நினைத்துக் கொள்வான். அது பத்திரமாக இருக்கிறதா என்று அடிக்கடி தடவிப் பார்ப்பான். ஆனால் அராலி வெளியில் தளபதிகள் கொல்லப்பட்ட சம்பவத்தோடு தாயத்தின் மீதிருந்த அசையாத நம்பிக்கை நொறுங்கிப் போய்விட்டது. விமலரட்ண மாத்தயாவிடமும் ஒரு தாயத்து இருந்தது. அவர் அதை சீருடைக்கு வெளியில் இடுப்பில் ஒரு அணிகலனைப் போலக் கட்டியிருந்தார். 'ஏசியா வீக்' நிருபர் இது பற்றி விமலரட்ண மாத்தயாவிடம் கேட்டபோது, அவர் பெருமையோடும், நம்பிக்கையோடும் தாயத்தைப் பற்றிக் கூறினார். விமலரட்ண மாத்தயாவும், கொப்பேகடுவ மாத்தயாவும் எத்தனையோ தடவைகள் கண்டிக்குப்போய் மகாநாயக்கர்களிடம் ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கி

"விஜித நித்திரை கொள்கிறாயா?'' சுமண கேட்டான். விஜிதவிற்கு எரிச்சலாயிருந்தது. இவன் என்னை ஒரு சோம்பேறி என்றா நினைக்கிறான்? சுமண சில மாதங்களிற்கு முன்பு தான் விஜிதவின் காவலரணிற்கு மாற்றப்பட்டான் இதற்கு முன்பு விஜிதவோடு இருந்தவன் காமினி முதியன்சலாகே. பொல்காவலையைச் சேர்ந்தவன் ஒரு முற்கோபி. நிறைய வாசிப்பான். ஆங்கிலத்திலும் எழுத்துக் கூட்டி வாசிக்க அவனால் முடியும். அநேகமாக மேலதிகாரிகளோடு முரண்படுவான். இரண்டாவது ஈழப் போர் துவங்கிய நாட்களில் காலிமுகத் திடலில் இராணுவத்தில் சேருவதற்காக அலைமோதியவர்களுள் காமினியும் ஒருவன். ஆனால் பயிற்சியை முடித்துக் கொண்டு போர் முனைக்கு வந்தபோதுதான் யுத்தம், தான் ரூபவாகினியில் பார்த்தது போன்றதல்ல என்பது காமினிக்கு விளங்கியது. "இவர்கள் எங்களை வெறும் இலக்கங்களாகத் தான் பார்க்கிறார்கள்'' என்று அடிக்கடி கூறலானான், சில மாதங்களிற்கு முன்பு காமினி லீவில் போனான். பிறகு வரவில்லை. முகாமில் எல்லாரும் காமினியைப் பற்றிக் கதைப்பதைத்தவிர்க்கலானார்கள். இவர்களிற்குப்பொறுப்பான லெப்டினன்ட் காமினியின் பெயரைக் கேட்டாலே எரிந்து விழுகிறான். காமினிக்கு என்ன நடந்தது? விஜித சுமணவிடம்கேட்டான் "சுமண, காமினி இப்போ எங்கே?'' சுமண உடன் பதில் கூறவில்லை. ஒரு சிகரெட்டை ஆறுதலாகப் பற்றவைத்துக் கொண்டு, இவனைப்பாராமலே ஆனால் இவனுக்குக் கேட்கக்கூடியதான ரகசியக் குரலில் சொன்னான். "காமினிராணுவத்தை விட்டு ஓடிப் போய்விட்டான்.''

"ஏன்''

வீணாகச் சாக விரும்பவில்லையாம்...''

வதற்குச்சிலநாட்கள் முன்பாக வீடு மாறி, தூரத்துக் கிராமங்களில் உள்ள உறவினர்கள்அல்லது நண்பர்களின் வீடுகளிற்குச் சென்று மறைந்து விடுகிறார்கள். ராணுவப் பொலிஸ் எத்தனை பேரையென்றுதேடுவது?''

விஜிதவும் சில மாதங்களிற்கு முன்பு லீவில் போயிருந்தான். ரத்மலான விமான நிலையத்திலிருந்து வெளியில் வந்தபோது அவன் கண்டது முற்றிலும் புதிய ஒரு உலகம். விதம் விதமான புதியரக கார்கள், மோட்டார் சைக்கிள்கள் நிரம்பி வழியும் மதுச்சாலைகள், இரவு விடுதிகள், புதிய புதிய அழகிகள்...கிரிக்கெட்.. எல்லாமாக ஒருபெரியகார்ணிவல் நடக்கிறதோ என்ற சந்தேகம் விஜிதவிற்கு உண்டாகியது. லீவுமுடிந்துதிரும்பி வந்த போது இவ்வளவு உல்லாசங்களையும் இழந்து மறுபடியும் இருண்ட பதுங்குகுழிக்குள் சலிப்பூட்டும் ஆபத்தான காவல்வேலைக்குப் போகிறோம் என்ற நினைப்பே மிகவும் கசப்பானதாக இருந்தது.

நேற்றும் இவர்களிற்குப் பொறுப்பான லெப்டினன்ட் கடந்தவார சண்டே ஐலண்ட்டை வாசித்து இவர்களிற்கு மொழிபெயர்த்துச் சொன்னான். அதன் ஆசிரியர் தலையங்கத்தில் ராணுவவீரர்களை நாடு உற்சாகப்படுத்துவது போதாது என்றுஎழுதப்பட்டிருப்பதாகஅவன்சொன்னான். லீவில்போகும் ஒரு சிப்பாய்

**- நிலாந்தன் -**

கொழும்பில் தான் காணும் கார்ணிவல் வாழ்க்கையால் எவ்வளவுஏமாற்றமடைவான் என்றும், நாடு தன்னைமறந்துவிட்டது என்ற விரக்தியுணர்வே அவனிற்குண்டாகும் என்றும் இதுவும் ராணுவத்திலிருந்துவிலகி ஓடுவோரின் தொகைஅதிகரிக்கக் காரணம் என்றும் அதில் எழுதப்பட்டிருக்

என்ன வாழ்க்கை இது...இவர்களுக்காகச் செத்துக்கொண்டிருக்கிறோம் ஆனால் இவர்கள் எங்களுக்குத்தரும் சிகரட் கோட்டாவைக் கூட ஒழுங்காகத் தருவதில்லை.'''' ஆனால் நயினாதீவிலும், ஏனையதீவுகளிலும் உள்ளவர்களிற்கு வசதிகள் அதிகம். அவர்களிற்கு ஆபத்தும்குறைவு ...''விஜித, ரோச்சை அடித்து சுமணவின் இடத்தை உறுதி செய்தபின் சிகரட் பெட்டியை இலக்காக எறிந்தான். காவலரண் சுவரில் ரோச் வெளிச்சம் பரவியது. சுவரில் ஒட்டப்பட்டிருந்த படங்கள் தெரிந்தன. எல்லாம் காமினியினுடைய வேலை. முதலில் .. தெய்வங்களின் படங்கள் புதுராஜாணவகன்ச (புத்தர்) கணதெய்யோ, கதரகமதெய்யோ... பிறகு நடிகையரின் படங்கள், மாலினி, கீதா, சோபிகா... பிறகு தளபதிகள் விஜயவிமலரட்ணா, கொப்பேகடுவ இருவரும் ஒன்றாக நிற்கும் படம் ..காமினி லீவில் போக சிறிது முந்தி ஏதோ ஒரு பத்திரிகையிலிருந்து மேற்படி தளபதிகளின் படத்தை வெட்டி எடுத்து வந்து கடைசியாக ஒட்டினான். அப்பொழுது அவர்கள் பகற்காவலில் ஈடுபட்டிருந்தார்கள். அன்றைக்குக் காமினி சொன்னான்...'விஜித நாங்கள் வீணாகச் செத்துக் கொண்டிருக்கிறோம்... பார், பெரிய பெரிய மாத்தயாக்களும் தப்புவதற்கில்லை.. அவர்கள் திடீரென்று தாக்க வந்தால் நீ எதிர்த்து நின்று சண்டை பிடியாதே. வீணாக

டன. என்பதால் பின்வாங்கி வந்தேன் என்று காரணம் சொல்லலாம்... வீணாகச் சாகக் கூடாது. அல்லது உறுப்புக்களை இழக்கக் கூடாது ..''

கடந்த கிறிஸ்மஸ் நாள் வரை எல்லாருமே தெம்புடனும், மிதமிஞ்சிய நம்பிக்கையோடும் காணப்பட்டார்கள். விரைவில் யாழ்ப்பாணத்தைப் பிடித்துவிடலாம்என்று. எல்லாருமே உறுதியாக நம்பினார்கள். ஆனையிறவிலும், வெலிஓயாவிலும், சிலாவத்துறையிலும் கொட்டியாவின் முதுகெலும்பு உடைக்கப்பட்டுவிட்டதாக பெரிய பெரிய மாத்தயாக்கள் எல்லாரும் சொன்னார்கள், ரூபவாஹினியும் அப்படித்தான்சொன்னது. ஆனால் கடந்தமாவீரர் நாளிலிருந்து துரதிர்ஷ்டம் ஆரம்பமாகியது குறிப்பாகக் கடந்த கிறிஸ்மஸ் நாளுடன் இராணுவத்தின் தோல்விஆண்டு ஆரம்பமாகியது. அதற்குப் பிறகுதான் இவ்வளவு தொகை துருப்புக்கள் இராணுவத்திலிருந்து ஓடத்தொடங்கினார்கள். ஆரம்பத்தில் புலிகள் பாயும் போது காவலரண்களில் இருந்த சிப்பாய்கள் பெரும்பாலும் ஒருரவையைக்கூடத் தீர்ப்பதற்கு அவகாசமின்றிக் கொல்லப்பட்டார்கள். எனவே காவலரண்களை அமைப்பதிலும், பராமரிப்பதிலும் மாற்றங்கள் செய்யப்பட்டன. தாக்கவரும் புலிகளின் தொகையைப் பொறுத்து காவலரண்களைக் கைவிட்டு ஓடிவரும் படியும் கூறப்பட்டது சிலசமயங்களில் புலிகளை ஏமாற்றும் விதத்

ரனின் நினைவு நாட்கள். மாவீரர் நாட்கள் போன்ற நாட்கள் வந்தவுடன் முகாம்களில் பதற்றம் அதிகரித்துவிடும். எந்தக்கணமும் தாக்கப்படலாம்... உசாராக இருங்கள் என்று அடிக்கடி அறிவுறுத்தப்படும்.

விஜித வானத்தைப் பற்றேதுமின்றி பார்த்தான். தேய்பிறை இரவு. நட்சத்திரங்கள்... பால் வீதி... அம்மா நினைவில் வந்தாள். பள்ளிப் பருவத்தில் ஒருதலையாகக் காதலித்த பெண் நினைவில் வந்தாள். காமினியும் நினைவில் வந்தான். அவன் தப்பிவிட்டான். அவன் கெட்டிக்காரன், துணிச்சலானவன். இப்பொழுது எங்கேயாவது நிம்மதியாக உறங்கிக் கொண்டிருப்பான். என்னைப் போல காற்றின் சிற்றசைவுக்கும் பதறும் நிலை அவனுக்கில்லை...

திடீரென்று ஒரு வெடிச்சத்தம்... அருகில்...மிக அருகில்... காவலரண் கூரையிலிருந்து மண் உதிர்ந்தது. விஜித தலையை உடனடியாக உள்ளிழுத்துக் கொண்டான். ரைஃபிளை இறுகப் பற்றியபடி மெல்ல மெல்லத் தலையைத் தூக்கினான். அவர்கள் வந்து விட்டார்கள்...? ஆனால் ஒரு வெடிச்சத்தம் தானே கேட்டது? "விஜித பயப்படாதே, அது நான் தான்... என்னுடைய ரைஃபிள் மிஸ்ஃபயர் ஆகி விட்டது ..'' ஓ... சுமணவா... அப்படியென்றால் அவர்கள் வரவில்லையா...? விஜித மூச்சை ஆழ உள்ளிழுத்து மெதுவாக வெளியில் விட்டான். பிறகு ரோச்சை

செய்வார்கள். நீங்கள் எல்லோரும் கவனமாக இருக்க வேண்டும் காவல் நேரத்தில் ஒருவரும் அயர்ந்திருக்கக் கூடாது வேறு சிந்தனைகள் உங்களது உசார் நிலையைக் குழப்புவதற்கு இடந்தரக்கூடாது. நீங்கள் உசாரற்றிருந்தால் அதற்குரிய தண்டனையைகொட்டியாவே உங்களிற்குத்தரும். கவனம்... மிகக் கவனம்... வரப்போகும் ஏழு நாட்களிலும் எந்த முகாமின எந்தக் காவலரண் தாக்கப்படுமோ தெரியாது. எங்களுடைய காவலரண்களும்தாக்கப்படலாம். உசாராயிருங்கள் காவலரண்களின் முனைனால் நிகழும் எந்த ஒரு நுட்பமான அசைவையும் உற்றுக்கவனியுங்

கூறினார். விமலரட்ண மாத்தயாவும், கொப்பேகடுவ மாத்தயாவும் எத்தனையோ தடவைகள் கண்டிக்குப்போய் மகாநாயக்கர்களிடம் ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் எந்த ஆசீர்வாதமும், எந்தத் தாயத்தும் அவர்களை அராலி வெளியில் காப்பாற்றவில்லை... அம்மா தந்தது என்பதற்காக விஜித தாயத்தைத் தொடர்ந்தும் அணிந்திருந்தான். இப்பொழுது அவனிடம் அது பற்றிப் புனிதமான நினைவுகள் ஏதும் கிடையாது. எனினும் ஆபத்தான சமயங்களில் தாயத்து நினைவுக்குவருவதைத்தவிர்க்க முடிவதில்லை.

குரலில் சொன்னான். "காமினிராணுவத்தை விட்டு ஓடிப் போய்விட்டான்."

"ஏன்"

வீணாகச் சாக விரும்பவில்லையாம்..."

"இப்போ அவன் எங்கேயிருக்கிறான்?"

"தெரியாது...ஆனால் நிச்சயமாக வீட்டில் இல்லை."

"எப்படியோ ராணுவப் பொலிஸ் அவனை ஒரு நாள் பிடிக்கத்தானே போகிறது?"

"இல்லை அது கடினமானது...எவ்வளவுபேரைப் பிடிப்பது..? ஆயிரக்கணக்கில் இப்படிஓடிப்போய்விட்டார்கள்.. லீவ்ல்போன பலர் லீவுமுடி

விட்டது என்ற விரக்தியுணர்வே அவனிற்குண்டாகும் என்றும் இதுவும் ராணுவத்திலிருந்துவிலகி ஓடுவோரின் தொகை அதிகரிக்கக் காரணம் என்றும் அதில் எழுதப்பட்டிருக்கிறதாம்.. விஜிதவோடு ஒன்றாகப் பயிற்சிஎடுத்தபலர் இபபோது இறந்து விட்டார்கள். அல்லது ஊனமடைந்து விட்டார்கள். அவர்களிற்குச் சமமான தொகையினர்லீவில் போனவர்கள் திரும்பி வரவில்லை. சயந்த குமார... பண்டார. பியந்த. சுசந்த.... எல்லோருமே ஓடிப்போய் விட்டார்கள்.

"விஜத சிகரட் தருகிறாயா?" சுமண கேட்டான். "சே

கொண்டிருக்கிறோம்... பார், பெரிய பெரிய மாத்தயாக்களும் தப்புவதற்கில்லை.. அவர்கள் திடீரென்று தாக்க வந்தால் நீ எதிர்த்து நின்று சண்டை பிடியாதே. வீணாக ஏன் உயிரை விட வேண்டும்? விருப்பமென்றால் நீயே உன்னுடைய காலைச் சுட்டுக் காயப்படுத்திக்கொண்டு ஓடி வந்துவிடு காயம் ஆறும் வரை சண்டைக்குப் போகாமல் தப்பலாம். அல்லது உன்னிடமுள்ள ரவைகளையும் ரவைக்கூடுகளையும் கழற்றி, அவர்கள் வரும் வழியில் வீசிவிட்டு ரைஃபிளை மட்டும் எடுத்துக் கொண்டு ஓடிவந்துவிடு. ரவைகள் முடிந்து விட்

செய்யப்பட்டன. தாக்கவரும் புலிகளின் தொகையைப் பொறுத்து காவலரண்களைக் கைவிட்டு ஓடிவரும் படியும் கூறப்பட்டது. சிலசமயங்களில் புலிகளை ஏமாற்றும் விதத்தில் டம்மியாகக் காவலரண்கள் அமைக்கப்பட்டன. இடையில், மோப்பநாய்களை உபயோகிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. முன்னணிக் காவலரண்களிற்கும் சற்று முன்பாக நாய்கள் கட்டப்பட்டன. ஆனால் நாய்களைப் பராமரிப்பது கடினமானதாயிருந்தது. தொடர்ந்தும் காவலரண்கள் வீழ்ந்தன... திலீபனின் நினைவு நாட்கள், குமரப்பா புலேந்தி

ஃபயர் ஆகி விட்டது.." ஓ... சுமணவா... அப்படியென்றால் அவர்கள் வரவில்லையா...? விஜித மூச்சை ஆழ உள்ளிழுத்து மெதுவாக வெளியில் விட்டான். பிறகு ரோச்சை எடுத்து இடதுகை மணிக்கட்டின் மீது ஒளியைப் பிடித்தான். "எங்களுடைய காவல் நேரம் முடிந்து விட்டது.. இனி அடுத்தகுறூப் வரும்..." அடுத்த குறூப்பில் சுமதிபாலவும் திலக்கும் வந்தார்கள். விஜித எழுந்தான். ரோச்சை சுமதிபாலவிடம் கொடுத்தான். திலக்கின் முதுகில்தட்டியபடி சொன்னான். "கவனம்.. மிகக் கவனம் அவர்கள் எப்படியும் வருவார்கள்..."

## சிணுங்கி

இறந்துபோன எனது சகோதரனைத் தரும்படி கேட்பன்..." இவனது சகோதரன் ஒரு போராளி அவன் ஆனையிறவுப் போரில் வீரமரணமடைந்து விட்டான்

பாலா மாஸ்ரரின் பார்வை வகுப்பு மாணவர்களில் ஊர்ந்து வந்து சிணுங்கியில் தவிக்கின்றது...

இவனிடம் கேட்பதா... விடுவதா... கேட்டால்... தனது காலைத் தரும்படி கேட்கப் போவதாகவே அவன்கூறுவான் ... அவனது உடற்குறையை அவனே கூறுகின்ற பரிதாப நிலையை... பாலாமாஸ்ரரின் மனம் பிரச்சினைப்படுகின்றது... சில வினாடிகளின் பின் கேட்டுவிடுவதென்ற முடிவுக்கு வருகின்றார்.

"செல்வக்குமார் நீங்கள் என்ன கேப்பியள்" பாலா மாஸ்ரர் இப்போதும் சிணுங்கி என்று கூறாமல்அவனதுசொந்தப் பெயரையே கூறுகின்றார்.

வகுப்பு மாணவர்கள் அனைவரும் தலையைத் திருப்பி பின் வரிசையில் இருந்த சிணுங்கியைப் பார்க்கின்றனர்... சகல மாணவர்களும் அவனது பதிலை எதிர்பார்க்கின்றனரா?...

சிவபாதவிருதயர் பதில் கூறாமல் சிரித்தான்.

சிவபாலன் பந்தடியில் சம்பியனாக வரவேண்டுமெனக் கூறினான்.

சொந்தமண்ணுக்குப் போக வேண்டுமென்று திருவாசகநாதன் கூறினான்.

அநியாயமாகச் சுடப்பட்ட தனது சகோதரன் தனக்கு வேண்டுமென்று கெங்காதரன் கூறினான்.

வீரமரணமடைந்த தனது சகோதரன் தனக்கு வேண்டுமென்று நகுலநாதன்கூறினான் சிணுங்கி என்ன கூறப்போகிறான்? ..

"சேர் சிவபெருமான் எனக்குக் காட்சி கொடுத்து...வேண்டியதைக் கேள் எண்டால்... இவ்வளவு காலமும் போராட்டத்திலை வீரமரணமடைந்த போராளிகளைத் திரும்பவும் தா எண்டு கேப்பன்..." சிணுங்கி அமைதியாகக் கூறுகிறான்

பாலா மாஸ்ரரும் மாணவர்களும்அதிர்ந்துபோய்விட்டனர்

பாலா மாஸ்ரரின் இதயம் கனக்கிறது..

அருச்சுனன்அதர்மம்நிறைந்த ஆட்சியை வெல்லுவதற்காக பாசுபதம் என்ற ஆயுதத்தைக் கேட்டான்.

சிணுங்கி-

அவனும் அதர்மம் நிறைந்த ஆட்சியை எதிர்த்து நிற்கின்ற போராளிகளுக்கு இன்னும் பலம் சேர்ப்பதற்காக இறந்த போராளிகளைத் தரும்படி கேட்கின்றான்.

பாலாமாஸ்ரரின்இதயத்தில் சிணுங்கி

அருச்சுனனாய்நிமிர்ந்து நிற்கிறான்,

(யாவும் கற்பனை)

## ஐரோப்பாவில்

றது என்றார் வண ஏ. ஜே. இம்மனுவல்.

★ அவர் மேலும் கூறும் போது- தமிழர்பிரச்சினையில் வெகு ஜனத் தொடர்புச் சாதனங்களின் பங்குப்பணி மிக முக்கியமானது இது குறித்து ஐரோப்பியநாடுகளில் வாழும் எமது அறிவு ஜீவிகள் கவனிப்பதாகத் தெரியவில்லை. சமீபத்தில் துர்க்கை அம்மன் கோவில் மற்றும் தேவாலயங்கள் மீது விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்ட போது சர்வதேசச் செய்தித்தாபனங்கள் இந்தச் சம்பவங்களுக்குக் கொடுத்த முக்கியத்துவம் மிகக் குறைவு இது குறித்து லண்டனில் பி. பி. சி தென் கிழக்கு ஆசிய நிகழ்ச்சிப் பொறுப்பாளர் வில்லியம் கிறாவெலி, சமகால நிகழ்வுகள் சேவைப் பொறுப்பாளர் அன்றூ ஜோயின்ஸ் தமிழ் மற்றும் ஹிந்தி சேவைகளுக்குப் பொறுப்பான நிச்சேட் ஹலிஸ் ஆகியவர்களைச் சந்தித்து, பி.பி.சியில் குறிப்பிட்ட எல்லை வரையறைக்குள் ஈழத் தமிழர் பிரச்சினைக்கு முக்கியத்துவம் தருமாறு கேட்டுக் கொண்டேன் யாழ்ப்பாணம் அல்லது வவுனியாவை மையமாகக் கொண்ட ஒரு செய்தியாளரை நியமிக்கும்படி விவரமாக எடுத்துக் கூறியதை அடுத்து அது பயனுள்ள ஆலோசனை என்பதையும் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள் என்று தெரிவித்தார்.

வத்திக்கான் வானொலியில் தமிழரின் நிலை- ஆசிய திருச்சபையின் பணி. அரசுக்கு தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் எண்ணம் ஏன் இல்லை?- என்று இரு தலைப்புக்களில் செவ்வி வழங்கினேன். ஜெர்மன் பத்திரிக்கைக்கும், ஜெர்மன் சர்வதேச வானொலிச் சேவைக்கும் DEUTSCHE WELLE செவ்விகள் வழங்கினேன். குரு என்ற முறையில் ஒரு நம்பிக்கை உண்டு. அதனைப் பாவித்து உண்மையைச் சொல்ல முன் வரவேண்டும் என்றார்.

## "களத் தீ" கவிதை நூல் வெளியீடு

கவிஞர் வேலணையூர் சுரேஷ் எழுதியுள்ள களத் தீ என்னும் கவிதை நூலின் வெளியீட்டு வைபவம் நாளை சனிக்கிழமை மாலை ஐந்து மணியளவில் யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவைப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் அவர்களால் வெளியிட்டு வைக்கப்படவிருக்கும் இந் நூலின் வெளியீட்டு வைபவம் யாழ். இந்துக் கல்லூரி அதிபர் அ. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.


# தமிழீழ மாவீரர்நாள் நவ - 27

எம் மண்ணிற்கு விதையாகும்
வேங்கைகள்
ஏந்திய ஆயுதம் மீண்டும்
உயிர்பெற
உணர்வுடன் விரைந்து
புலியுடன் இணைவீர்!



## எழிலகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி/5490)

# ஈழநாதம்

உறுதி தளராத

## எமது உரிமைக் குரல் சிங்களவரின் மனச்சாட்சியை தொடவில்லை

நீண்டதாக, மிகவும் கடினமானதாக, நெருக்கடிகளும் சோதனைகளும் நிறைந்ததாக, எமது விடுதலைப் பயணம் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்கிறது. காந்தீயமென் வழிப் போராட்டத்திலிருந்து ஆயுத எதிர்ப்பு இயக்கம்வரை, இத்தனை காலமாக எத்தனையோ வழிகளில், நீதி கேட்டு நியாயம்கோரி நாம் எழுப்பிய உரிமைக்குரல் சிங்கள தேசத்தின் மனச்சாட்சியைத் தொட்டதாகத் தெரியவில்லை.

காலம் காலமாக எமது மக்கள் அனுபவித்த அவலங்கள், சாவும் அழிவுமாக அவர்கள் சந்தித்த அனர்த்தங்கள், சோகத்தின் சுமையால் அவர்கள் சிந்திய இரத்தக்கண்ணீர்-இவை எல்லாம் பௌத்த தேசத்தின் காருண்ணியத்தைத் தொட்டதாகத்தெரியவில்லை.

எதிரி ஈவிரக்கமற்றவன். போர்வெறி கொண்டவன். எமது தாயகத்தைச்சிதைத்து, எமது இனத்தை அழித்துவிடுவதையே இலட்சியமாகக் கொண்டவன் அவனது இதயக் கதவுகள் திறந்து எமக்கு நீதி கிடைக்குமென நாம் எதிர்பார்க்க முடியாது.

## தொடர்ந்து போராடுவதை தவிர எமக்கு வேறு வழியில்லை

இந்தச் சூழ்நிலையில் நாம் என்ன செய்வது? நாம் தொடர்ந்து போராடுவதைத் தவிர, தொடர்ந்து எமது போராட்டத்தைத் தீவிரமாக்குவதைத்தவிரஎமக்கு வேறு வழி இல்லை.

நாம் வன்முறை மீது மோகங் கொண்ட போர் வெறியர்கள் அல்லர். நாம் உண்மையில், ஆன்பரீதியாக,சமாதானத்தையே விரும்புகிறோம். ஒரு நிரந்தரமான, நிம்மதியான, கௌரவமான சமாதானத்தையே விரும்புகிறோம். அதனால் தான் இந்தக் கொடூரமான போரின் மத்தியிலும் சமாதானத்தின் கதவுகளை- நாம் திறந்து வைத்திருக்கிறோம் சமாதானத்தின் பாதையை நாம் மூடிவிடவில்லை. அப்படி மூடிவிடும் நோக்கமும் எமக்கில்லை. ஏனென்றால் சமாதானத்தை அடைவதற்காகவே நாம் போராடுகிறோம்.என்றோ ஒருநாள் எதிரியானவன் எமது சமாதானக் கதவுகளை தட்டுவானாக இருந்தால் நாம் எமது நேசக் கரங்களை நீட்டத் தயாராக இருக்கிறோம்.

ஆனால் எமது எதிரியோ வன்முறை மீது காதல் கொண்டவன்.அதனால் அன்றிலிருந்து இன்றவரை ஒரு அநியாயமான யுத்தத்தை எம் மீது திணித்து வருகின்றான்.இன்று எதிரியின் படையணிகள் எமது வாசல்வரை வந்து போர் முரசு கொட்டுகின்றன. எம்மை அழித்து விடுவதற்கும் எமது மண்ணை விழுங்கி விடுவதற்கும் சங்கணம் கட்டி நிற்கின்றன. இந்த இன அழிப்பு யுத்தத்திற்காக எந்த அளவிற்கும் இரத்தம் சிந்த எதிரி தயாராக இருக்கிறான்.

## சுதந்திரம் இரத்தம் சிந்தி பெறும் புனிதமான உரிமை

இந்த இக்கட்டான, நெருக்கடியான சூழ்நிலையில் நாம் என்ன செய்வது? போராடி எமது மக்களையும், எமது மண்ணையும் பாதுகாத்துக்கொள்வதைத் தவிர எமக்கு வேறு வழி எதுவும் உண்டா?

போராடித்தான் நாம் எமது சுதந்திரத்தை நிலைநாட்டிக்கொள்ளவேண்டும். சுதந்திரம் என்பது பேரம்பேசி பெற்றுக்கொள்ளும் ஒரு வியாபாரப் பண்டம் அல்ல. அது இரத்தம் சிந்தி வென்றுகொள்ளப்படும் ஒரு புனிதமான உரிமை.

எத்தனையோ நெருக்கடிகளை நாம் சந்தித்து விட்டோம்.இனி எம்மை எதுவும், எவரும் அச்சுறுத்த முடியாது.நாம்துணிந்துபோராடுவோம். வரலாறு எமக்கு வழிகாட்டியாக நிற்கிறது. சத்தியம் எமக்குச் சாட்சியாக நிற்கிறது

எமது சுதந்திர இயக்கத்தின் தூண்களாய் நிற்கும் மாவீரர்களே!

உங்கள் இரத்தத்தால் எங்கள் விடுதலை வரலாறு மகத்துவம் பெறுகிறது.

உங்கள் இலட்சிய நெருப்பால் எங்கள் போராட்டம் புனிதம் பெறுகிறது

## சமஷ்டி அரசியல் அமைப்பு வட-கிழக்குஇணைப்பில்லை

வடக்கு - கிழக்குப் பிரச்சினை தொடர்பாக ஒரு தீர்வை எட்டும் வகையில் சமஷ்டி ஆட்சி அமைப்பு முறைக்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் கொள்கையளவில் இணங்கியுள்ளதாகக் கொழும்புச்செய்திகள்தெரிவிக்கின்றன

இவை பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காணும் வகையில் சமஷ்டி ஆட்சி அமைப்பை சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆதரிப்பதாக பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் முன் நேற்றுப் பேசிய எதிர்க் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா குறிப்பிட்டார். சிறிமாவோ தெரியப்படுத்திய சமஷ்டி ஆட்சி அமைப்புப்பற்றிய யோசனையை நீதி மற்றும் கல்வி உயர் கல்வி அமைச்சர் ஏ.சி. எஸ். ஹமீட் உடன் ஆமோதித்துப் பேசினார். வடக்குக் கிழக்கு இணைப்பைத் தமிழ்க் குழுக்கள் கைவிடும் பட்சத்தில் ஒரு சமஷ்டி அரசியல் சட்டம் ஏற்புடையது என்றும் அமைச்சர் ஹமீத் வலியுறுத்திப் பசினார்.

இரு கட்சிகளும் தெரிவித்த இக் கருத்துக்கள் பற்றி தமிழ் குழுக்கள் சந்தேகம் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது


### நன்றி நவிலல்

### அமரர் நமசிவாயம் சபாரத்தினம்

யாழ் இந்துக் கல்லூரியின் இளைப்பாறிய அதிபர் அமரர் ந சபாரத்தினத்தின் இறுதிச்சடங்குகளைத்தாமாகவே முன்வந்து நடத்தித் தந்த அன்பர்கள் பக்திப் பண்ணிசை இசைத்த அடியார்கள், சமுகமளித்த உற்றார், உறவினர், நண்பர்கள், மலர்மாலைகள், மலர் வளையங்களால் அஞ்சலி செலுத்திய அன்பர்கள், இறுதி ஊர்வலத்தைச் சிறப்புறச் செய்த யாழ். இந்துக் கல்லூரி சமூகத்தினர் இரகங்லுரை நிகழ்த்திய பெரியோர்கள், அனுதாபச் செய்திகள் அனுப்பிய நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் அன்புடன் கலந்த நன்றி. தனித்தனியே எங்கள் நன்றியைத் தெரிவிக்கஇயலாமைக்கு வருந்துகிறாம்.

அன்புடன்

மனைவி, மக்கள், மருமக்களுக்காக

(3711) டாக்டர் ச. சிவகுமாரன்



### NEWSCIENCE ACADEMY
JAFFNA

93 A / L

WEEK END PAPER CLASS

ஆரம்பமாகிவிட்டது.

BOTANY 11.00 - 12.00
திரு. குணசீலன்

ZOOLOGY 12.00 - 1.00
திரு. ஸ்ரீகரன்

PURE A PP MATHS 12.00 - 2.00
திரு வெக்டர்

PHY 2.00 - 3.00
திரு. கணேசன்

CHE 3.00 - 4.00
திரு. மணியப


நள்ளிரவு இரு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தினர். வீதியால் சென்று கொண்டிருந்தவர்கள் தமது வாகனங்களை அந்த இடத்திலேயே நிறுத்தி விட்டு அஞ்சலி செலுத்தினர்.

சுமார் இரண்டு நிமிடநேர மௌன அஞ்சலியைத் தொடர்ந்து சுமார் பன்னிரண்டுமணி இரண்டு நிமிடமளவில் மாவீரர் நினைவுச் சுடர் ஏற்றப்பட்டது. அனைத்து மாவீரர் துயிலும் இல்லங்கள், பொது மக்களின் வீடுகள், தேவாலயங்கள், ஆலயங்கள், அரச தனியார்துறை அலுவலகங்கள், பொதுஸ்தாபனங்கள், பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் உட்பட அனைத்து இடங்களிலும் இம் மாவீரர் சுடர்கள் ஏற்றபபட்டன. இதனால் நள்ளிரவையும் பகலாக்கும் வகையில் எங்கும் ஒளி வெள்ளமாகக் காட்சியளித்தது

குடா நாட்டில் கோப்பாய், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய மாவீரர் துயிலும் இல்லங்களில் ஒவ்வொரு போராளிகளது நினைவுச்சமாதிகளிற்கும் முன்னால் ஒவ்வொரு நினைவுச் சுடர்கள் ஏற்றப்பட்டிருந்தன. யாழ். செயலகம், யாழ் பல்கலைக்கழகம்,யாழ். கல்வித்திணைக்களம், யாழ். மாநாகரசபை அலுவலகம் உட்பட அனைத்துப் பாடசாலைகளிலும் மாவீரர் நினைவுச் சுடர்கள் ஏற்றப்பட்டிருந்ததாக அனைத்துப்பகுதிகளுக்கும் சென்று திரும்பிய நமது நிருபர்கள் தெரிவித்தனர்.

உறங்கிக் கிடந்த குடாநாட்டின் வீதிகள் நள்ளிரவுவேளை ஒலித்த நினைவொலிகளைத் தொடர்ந்தும் நினைவுச்சுடர்கள் ஏற்றிவைக்கப்பட்டதைத் தொடர்ந்தும் உயிரோட்டம் பெற்றுக்கொண்டது. வீதிளெங்கும்மக்கள் நடமாட்டம் அதிகமாக காணப்பட்டது. ஒவ்வொருவீடுகளினது வாயில்களிலும் சுடர்விட்டெரிந்து கொண்டிருந்த நினைவுச்சுடர்களைச் சூழ்ந்து நின்று மாவீரர்களை நினைவு கூர்ந்தது டன் தமது அயல் வீடுகளுக்கும் சென்று திருப்பினர்.

அனைத்து மாவீரர் துயிலும் இல்லங்களிலும் மாவீரர்களது பெற்றோர் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர். இன்று அதிகாலை 2-00 மணிவரை இந் நிகழ்வு தொடர்ந்தது. (க)

### பாரிய கடற்படை கப்பல்

(வடமராட்சி)

நாகர் கோயில் கடற் பகுதியில் சிறிலங்கா அரசுக்கு சொந்தமான பாரிய கப்பல் ஒன்று கடலின் நடுப் பகுதியில் தரித்து நிற்பதாக மீனவர்கள் தெரிவித்தனர். (யோ



### "மாவீரர் வார சிந்தனை"

"இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்தமண் என்னைப் பிறப்பித்தது. நான் நேசிக்கும் எனது மக்களைப் பிறப்பித்தது."

"இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்தமண் என்னை வாழவைக்கிறது. எனது வாழ்விடமாய் திகழ்கிறது"

"இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்தமண் எனக்கு சுவையான உணவைத் தந்து என்பசியைத் தீர்த்துவைக்கிறது."

"இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்தமண் சுத்தமான காற்றை எனக்கு சுவாசிக்கத் தருகின்றது."

"இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்தமண் நான் களைத்திருக்கும் போதெல்லாம் எனக்கு படுக்கையாக அமைகிறது."

"இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன் ஏனெனில் இந்தமண் நான் அயர்ச்சியடையும் போது தனது அற்புதமான இயற்கை எழிலால் எனக்குப் புத்துயிரூட்டுகிறது"

"இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்த மண்ணின் வளத்து உற்பத்திகளை நேசிக்கின்றேன். என் வாழ்வுக்கே ஆதாரமான இந்த மண்ணைக் காக்க நான் எதையுமே இழக்கத் தயாராக

உரிமை.

நாம் தொடர்ந்து போராடுவோம். எத்தனை இடர் வரினும் எத்தனை துயர் வரினும், நாம் எமது விடுதலைநோக்கியபயணத்தைத் தொடருவோம். எமது மக்கள் சிந்திய இரத்தமும் எமது மாவீரர் புரிந்த தியாகமும் வீண் போகாதிருக்க நாம் உறுதிதளராது போராடுவோம். எமது இலட்சியப் பயணத்தில் எத்தனையோ சவால்களை, எத்தனையோ ஆபத்துக்களை,

போராட்டம் புனிதம் பெறுகிறது

உங்கள் தியாகத்தால் எங்கள் தேசியம் உருவாக்கம் பெறுகிறது

உங்கள் நினைவுகளால் எங்கள் உறுதி வைரம் பெறுகிறது.

எங்கள் தேச சுதந்திரத்தின் சிற்பிகளாகிய உங்களை நாம் சிரந்தாழ்த்திவணங்குகிறோம்.

''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''

## வீர அஞ்சலி



**மேஜர் தமிழரசன்**

(டொச்சன்)

எம் இனிய தமிழரசா
இளவேனில் காலத்தில் பூத்துக் குலுங்கும் மலர்களை
ஒத்தவனே நீ இன்று இல்லையே?
தாங்க முடியவில்லையே
எப்போது யாழநகர் வரும் போதும்
நலம் விசாரிக்கும் உற்ற நண்பனே!
நீ இல்லாமல் நாம் என்ன செய்யப் போகிறோம்...

எம் மனத்துக்கினிய மாவீரனே! சென்று வருக. உன் இலட்சிய பாதை தொடர மீண்டும் இந்த தமிழ் ஈழ மண்ணில் வீரத்தமிழ்த் தாயின் வயிற்றில் பிறந்து வருக!

நீ வரும் நாளுக்காக காலமெல்லாம் காத்திருப்போம்.

கனக்கும் இதயத்துடன்
**மனோகரன் குடும்பம்**
யாழ்ப்பாணம்.

(3713)

நுணாவிலில்

பாரிய குழிகளும் பெரிய மண் மேடும் ஏற்பட்டது:

இப்பதுங்கு குழிக்குள் புதைந்து கிடந்தோரை மீட்டெடுக்க அரை மணி நேரத்திற்கு மேல் எடுத்தது. இதனால் பதுங்கு குழியினுள் இருந்த இராஜசுந்தரம் கீதா [வயது 21] இராஜசுந்தரம் சிவகரன் (வயது 13) ஆகியோர் மூச்சுத் திணறி மரணமாகினர். அத்துடன் இராஜசுந்தரம் யசோதரன் (வயது 19), கே. சுசீலாதேவி (வயது 37), எஸ். யசோதா [வயது 18] ஆகியோர் படுகாயம் அடைந்தனர். இவர்களில் இராஜசுந்தரம் யசோதரன் யாழ். வைத்திய சாலையில் மரணமானார்

இத்தாக்குதலை தொடர்ந்து சுப்பர் சொனிக் விமானம் ஒன்று பல தடவை வட்டமிட்டு 'கனொன்' துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது. இத்தாக்குதலால் இரு வீடுகள் சிறு சேதமடைந்தன. உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

இதேவேளை சுப்பர் சொனிக் விமானம் குண்டு வீச்சை மேற்கொண்டிருந்த சமயம் பாதுகாப்பிற்காக ஓடிச்சென்று புற்களிற்கிடையே படுத்த மாணவி யொருவர் விஷ ஐந்து தீண்டிய நிலையில் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சங்கத்தானையைச் சேர்ந்த செல்வி தர்மலிங்கம் குணவிஜயா (வயது17)என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவர். [35]

திரு. மணியம்

PU / APP MATHS 4.00 - 6.00

திரு. குணசிங்கம்

**PHY 3.00 - 5.00 - Thursday**

திரு. சோதிலிங்கம்

(சி-549 2)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

| ஆண்டவன் படைப்பில் | அநியாய அழிப்பில் |
|---|---|
| 09 | 27 |
| — | — |
| 01 | 11 |
| — | — |
| 197 | 1989 |



**கனகசபை சுதாகரன் (சுதா)**

அன்பு மகனே ஆருயிர் செல்வமே
எம்மையெல்லாம் விட்டிழந்து
எத்தனை நாளானாலும் - இன்றும்
உன் உரு நிற்குதையா
கண்முன்னே

மாவீரன் அண்ணனவன்
மதிவிளக்கு தானேற்ற
விழித்தெழுந்து வெளிக்கிட்டு
வேங்கையவன் நினைவு கூற
புண்ணிய பூமியாம்
புலோப்பளையினிலே,
வெறியர் கூட்டத்தின்
வேட்டுக்கிலக்காகி விட்டிழந்தான்
எம்மை யெல்லாம்.

மாசார், பளை. (3361) குடும்பத்தினர்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

நேசிக்கின்றேன். என் வாழ்வுக்கே ஆதாரமான இந்த மண்ணைக் காக்க நான் எதையுமே இழக்கத் தயாராக இருக்கின்றேன்''

''தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்''

(சி/5478)

## மரண அறிவித்தல்கள்

### செல்வன் பாலசிங்கம் சத்தியசீலன் (லெப்டினன்ட் மதி)

நவக்கிரி புத்தூரை சேர்ந்தவரும், யா/ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி (வர்த்தகப்பிரிவு 90 ஆம் ஆண்டு) பழைய மாணவரும் ஆகிய பாலசிங்கம் - சத்தியசீலன் (லெப்.மதி) நேற்று 26 - 11 - 92 அன்று மன்னாரில் வீரச்சாவு அடைந்தார். அன்னாரின் புகழுடல் 27 - 11 - 92 இன்று கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், சக போராளிகள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

நவக்கிரி,
புத்தூர்.

தகவல்
த. பாலசிங்கம்
(தந்தை)

[3718]

### துரைராஜா கணதாஸ் (SIV ENGINEERS)

ஓட்டுமடம் B. A. தம்பி லேனைச் சேர்ந்த சபாரத்தினம் துரைராஜா (ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர்), காலஞ்சென்ற துரைராஜா ஞானபூங்கோதை தம்பதிகளின் புதல்வன் ஆகிய து. கணதாஸ் (SIV REFRIGERATION ENGINEERS) 22 - 11 - 92 அன்று கொழும்பில் காலமானார். இவர் து. மோகனதாஸ் (ELETRICAL SUPRINTANT - வாழைச்சேனை), சற்குணராஜா யசோதரா (பிரான்ஸ்), சான்ஸ் பென்லி தேவகி (மன்னார்), வாசுகி, துளசிதாஸ் (கொழும்பு), ராமதாஸ் (யாழ். பல்கலைக்கழகம் 2 ஆம் வருடம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார் இவரது ஈமக்கிரியைகள் 23 - 11 - 92 அன்று கொழும்பில் நடைபெற்றது என்பதை உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

19/1, B. A. தம்பி லேன்,
யாழ்ப்பாணம்.
[சி-5495]

தகவல்:
து. ராமதாஸ்
(யாழ். பல்கலைக் கழகம் 2 ஆம் வருடம்)